Vol.38 Issue No.19 2025 ஜூன் 21-24 ரூ.30

உண்மை துணிவு உறுதி

# நக்கீரன்

NAKKHEERAN

'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' நெ.1 புலனாய்வு வாரமிருமுறை இதழ்



கடத்தல் கேஸ்! எம்.எல்.ஏ - ஏ.டி.ஜி.பி! வில்லங்க விசாரணை!



தி.மு.க.வுக்கு தூது விட்ட ஜெயக்குமார்!



டாஸ்மாக்! ED அதிகாரிகளை வறுத்தெடுத்த நீதிமன்றம்!

EXCLUSIVE

## யோகா அல்ல ஹிப்னாடிசம்!

# சீட்டிங் ஜக்கி!

ஆதாரங்களுடன் பகீர் ரிப்போர்ட்!

சந்தன மாலை,
குங்கும பொட்டுடன் விஜய்



# விஜய் நடத்திய பரிகார பூஜை!

“ஹலோ தலைவரே, தேர்தல் நெருங்க நெருங்க அரசியல் அரங்கில் வினோத காட்சிகள் எல்லாம் அரங்கேறுது.”

‘‘ஆமாம்பா, த.வெ.க. விஜய் கூட பரிகார பூஜை பண்ணியிருக்காரே?”

“உண்மைதாங்க தலைவரே, த.வெ.க. தலைவரான நடிகர் விஜய், கடந்த சில நாட்களாக சந்தன மாலை அணிந்தபடி வலம்வருகிறார். அவர் நெற்றியை சந்தன, குங்குமப் பொட்டுகள் அலங்கரிக்கின்றன. அவரது இந்த திடீர் பக்தியைப் பார்த்து, த.வெ.க. நிர்வாகிகளே, தலைவருக்கு என்ன ஆச்சு? என குழம்பிப்போயிருக்கிறார்கள். இது குறித்து விஜய் தரப்பிலேயே விசாரித்தபோது, ‘இதுவரை நான்குகட்ட சர்வேக்கள் எடுக்கப்பட்டது என்றும், எல்லா சர்வேக்களிலும் 25 சதவீத வாக்குகள் மட்டுமே த.வெ.க.வுக்கு கிடைக்கிறது என்றும், இந்த ஆதரவு, தேர்தல் நெருங்க நெருங்க 35 சதவீதமாக மாறும் என்றும், தலைவர் விஜய் அருகிலேயே இருப்பவர் கள் அவரை உசுப்பேத்தி வந்தனர். ஆனால், எங்கள் கட்சிக்காக களமிறக்கியிருக்கும் ஆய்வு நிறுவனமோ தலைவர் விஜய்யிடமே, ‘உங்களிடம் சொல்லப்பட்ட சர்வே விபரங்கள் அனைத்தும் பொய். உண்மை நிலவரம் சரியாக இல்லை’ என்று தெரிவித்திருக்கிறது. இதனால், அதிர்ந்துபோன விஜய், தனது ஆஸ்தான ஜோதிடரை வரவழைத்து தீர்வு கேட்டிருக்கிறார். ஜோதிடரோ, சில பரிகார பூஜையை நடத்தச் சொல்லியிருக் கிறார். இதன்படி, அடுத்த மூன்றாம் நாளே, 48 மணி நேர பரிகார பூஜை ரக சியமாகச் செய்யப்பட்டது. அந்த பூஜை யில் வைத்த சந்தன மாலையைத்தான் விஜய் அணிந்திருக்கிறார். இந்த பூஜை யால் அவருக்குத் தேர்தலில் செல்வாக்கு கூடும் என்ற நம்பிக்கை வந்திருக்கிறது’ என்கிறார்கள் புன்னகையோடு.”

“பா.ம.க.வில் நடக்கும் பவர் யுத்தம் நாளுக்கு நாள் மோசமாகி வருகிறதே?”

“ஆமாங்க தலைவரே, ராமதாஸுக் கும், அன்புமணிக்கும் இடையிலான சமாதானப் பேச்சுகள் எடுபடவில்லையாம். அன்புமணி மன்னிப்பு கேட்டது குறித்து, சமாதானத் தூதுவராக மாறிய ஆடிட்டர் குருமூர்த்தி ராமதா ஸிடம் விவாதித்துள் ளார். அப்போது ராமதாஸ், ‘அவனோடு சமாதானமாகிறேன். ஆனால், தலைவர்




# பா.ம.க.வில் தொடரும் பவர் யுத்தம்!



பதவியைக் கேட்டு அன்புமணி நச்சரிக்கக் கூடாது. தேர்தல் பணிகளில் அவன் கவனம் செலுத்தட்டும். பா.ம.க.விற்கு 100 சதவீத வெற்றியைப் பெற்றுத் தரட்டும்... அப்போது, தலைவர் பதவியைத் தருகிறேன்' என்று உறுதியாகச் சொல்லிவிட்டாராம். ஆனால் அன்புமணியோ, ராமதாஸின் நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொள்ளவில்லை. தலைவர் பதவியை எந்தச்சூழலிலும் விட்டுத்தர மாட்டேன் என்பதே அவரது முடிவாம். இதில் இருபுறமும் சமாதானம் பேசிய குருமூர்த்தியே களைத்துவிட்டாராம். இதற்கிடையே பா.ம.க. விவகாரம் குறித்து குருமூர்த்தியிடம் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா விசாரித்து அறிந்திருக்கிறார். இதைத் தொடர்ந்து, ராமதாஸிடம் நானே பேசுகிறேன் என்றிருக்கிறாராம் அவர். இந்த நிலையில் 19ஆம் தேதி சேலம் மற்றும் தர்மபுரி மாவட்ட பா.ம.க. பொதுக்குழுக் கூட்டத்தை நடத்துகிறார் அன்புமணி. கூட்டத்தில் கலந்துகொள்வதைத் தவிர்க்க, அருள் எம்.எல்.ஏ நெஞ்சுவலி என்று மருத்துவமனையில் அட்மிட் ஆகிவிட்டார். அதேபோல் கோ.க.மணியும் மருத்துவமனையில் படுத்திருக்கிறார்.”

“கவர்னர் திருந்தவில்லை என்று முதல்வர் ஸ்டாலின் ஆவேசமாக வெடித்திருக்கிறாரே?”

“ஆமாங்க தலைவரே, தஞ்சையில் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் அமைக்கும் மசோதாவை, தி.மு.க. அரசு சட்டப்பேரவையில் நிறைவேற்றி கவர்னருக்கு அனுப்பிவைத்திருந்தது. ஆறேழு வாரங்கள் கடந்தும்கூட, அதைக் கிடப்பிலேயே நந்தித்தனமாக போட்டு வைத்திருக்கிறார் கவர்னர். இந்த நிலையில் உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், அவரைச் சந்திக்க நேரம் கேட்டும், பல்கலைக்கழக மசோதா குறித்துக் கேட்கத்தான் அவர் சந்திக்க வருகிறார் என்பதைப் புரிந்துகொண்டு, அவருக்கும் நேரம் கொடுக்காமல் கவர்னர் ரவி இழுத்தடித்து வருகிறார். இந்த நிலையில்தான், தஞ்சை சுற்றுப் பயணத்தில் இருந்த முதல்வர் ஸ்டாலின், உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்குப் பிறகும் கவர்னர் திருந்தவில்லை. அவர் போக்கில் மாற்றம் இல்லை என்று தன் மனக்கொதிப்பை அங்கே வெடித்திருக்கிறார். முதல்வரின் இந்த திடீர் கோபத்துக்குக் காரணம், பல்கலைக்கழக துணைவேந்தர்கள் நியமனம் குறித்த வழக்கில், தமிழக அரசுக்கு எதிராக தீர்ப்பு வழங்கிய நீதிபதி ஒருவர், கவர்னரை நட்போடு போய்ச் சந்தித்திருக்கிறார். இதை அறிந்ததால்தான், முதல்வர் தன் ஆதங்கத்தை இப்படி வெளிப்படுத்தியிருக்கிறார் என்கிறார்கள்.”

“தி.மு.க. கூட்டணியில் ஓட்டை என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சொல்லியிருக்கிறாரே?”

‘‘வி.சி.க. தலைவர் திருமாவளவனை திருச்சியில் ஓட்டல் ஒன்றில் 30 நிமிடங்களுக்கும் மேலாக சந்தித்துப் பேசினார் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் வைகைச்செல்வன். அப்போது, தான் எழுதிய புத்தகம் ஒன்றை பரிசளித்தார். அதன் பிறகு, தேர்தல் அரசியல் குறித்து திருமாவிடம் பேசிய வைகைச்செல்வன், தி.மு.க. கூட்டணியில் நீங்கள் முரண்பட்டால், கொஞ்சம்கூட யோசிக்காமல் அ.தி.மு.க. கூட்டணிக்கு வரவேண்டும் என அழைத்திருக்கிறார். இந்த சந்திப்பு அரசியல் ரீதியாக பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இது குறித்து கேட்கப்பட்டபோது... திருமா, ‘ஒரே ஓட்டலில் நாங்கள் தங்கியிருந்தோம். மரியாதை நிமித்தமாக சந்தித்தோம். அப்போது இலக்கியம் சம்மந்தமாகப் பேசிக்கொண்டோமே தவிர, அரசியல் குறித்தெல்லாம் பேசிக்கொள்ள

வில்லை' என்றார். இந்த நிலையில் திருமாவுடனான சந்திப்பு பற்றி வைகைச் செல்வனிடம் செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். அதற்கு அவர், 'தி.மு.க. கூட்டணிக்குள் ஓட்டை விழுந்துவிட்டது. எங்கள் கூட்டணிக்கு பல கட்சிகள் வரும்' என்று கொளுத்திப் போட்டிருக்கிறார். இது தி.மு.க. தரப்பை அதிரவைத்திருக்கிறது. உடனே தி.மு.க. தரப்பில் இதற்கு பதிலளித்த ஆர்.எஸ்.பாரதி, 'தி.மு.க. கூட்டணி, கொள்கையின் அடிப்படையில் உருவானது. அதில் எந்த ஓட்டையும் விழவில்லை' என்று பதிலடி தந்திருக்கிறார்."

"கலெக்டர் ஒருத்தர் ஆளுங்கட்சி மக்கள் பிரதிநிதிகளை அலட்சியப் படுத்தி ஓரம்கட்டி வருவதாகச் சொல்கிறார்களே?"


"ஐ.ஏ.எஸ். உள்ளிட்ட உயர் அதிகாரிகளின் 'லாபி' டெல்லிவரை செல்வாக்கு பெற்றிருப்பதால் இங்குள்ள ஆளும்கட்சி மக்கள் பிரதிநிதிகளைக் கூட அவர்கள் மதிப்பதில்லை. மேலும் அரசு விழாக்களிலும் அவர்களை ஓரம் கட்டி வருகிறார்கள். எடுத்துக்காட்டாக, ஈரோடு மாவட்ட கலெக்டராக இருப்பவர் ராஜகோபால் சுங்கரா. அவர் மீது பல்வேறு புகார்கள் சென்றும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது குறித்து ஆதங்கத்தை வெளிப்படுத்திய தி.மு.க. தரப்பினர், எங்கள் மாவட்ட மக்கள் பிரதிநிதிகளான அந்தியூர் செல்வராஜ் எம்.பி., ஈரோடு பிரகாஷ் எம்.பி., சட்ட மன்ற உறுப்பினர்கள் அந்தியூர் வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு சந்திரகுமார் ஆகியோரை எல்லாம் கலெக்டர் மதிப்பதே இல்லை. அரசு நலத்திட்ட விழாக்களுக்கு மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறை மூலம் அனுப்பப்படும் பத்திரிகை செய்திகளில்கூட எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் கலந்துகொள்வதைக் குறிப்பிடமாட்டார்கள். அனைத்து நிகழ்ச்சிகளையும் இந்த கலெக்டரே நடத்துவதுபோல்தான் அறிவிப்பு வெளியிடுவார்கள். அண்மையில் மினிபஸ் சேவைக்கான தொடக்க விழா, கலெக்டர் அலுவலக வளாகத்திலேயே நடந்தது.இதில் தி.மு.க. எம்.எல்.ஏ.க்களான அந்தியூர் வெங்கடாசலமும், ஈரோடு சந்திரகுமாரும் கலந்துகொண்டனர்.விழாவில் பங்கேற்ற இவர்களை அலட்சியப்படுத்தி, ஒரு ஓரத்தில் நிற்கும்படி செய்த கலெக்டர் ராஜகோபால், மினி பஸ் சேவையைத் தானே தொடங்கிவைத்தார். இவரது அலட்சியம், ஆளுங்கட்சி மக்கள் பிரதிநிதிகளையே மனம் நோகவைத்து வருகிறது என்கிறார்கள் எரிச்சலாய்."

"தி.மு.க. எம்.எல்.ஏ. மீது கட்சியினர் கோபத்தில் இருக்கிறார்களே?"

"பாளையங்கோட்டை தி.மு.க. எம்.எல்.ஏ.வான அப்துல் வகாப், பா.ஜ.க.வின் மாநிலத் தலைவரான நயினாரோடு அட்ஜெஸ்மெண்டில் இருப்பதாக, அங்கிருக்கும் உடன்பிறப்புகள் மத்தியிலேயே ஆவேச டாக் அடிபடுகிறது. அதாவது, வரும் தேர்தலில் நயினார் நெல்லையில் நிற்கத் திட்டமிட்டிருக்கிறாராம். அதேபோல் அப்துல்வகாப். மீண்டும் பாளையங்கோட்டையில் நிற்கவிருக்கிறாராம். இதன் அடிப்படையில் நயினாரும், வகாப்பும் ஒருவரை ஒருவர் ஜெயிக்க வைக்க உதவுவதாக தங்களுக்குள் சீக்ரெட் டீலிங் போட்டுக் கொண்டிருக்கிறார்களாம். இந்தத் தகவல்தான் இப்போது, நெல்லை பகுதி அரசியலைச் சூடாக்கி வருகிறது."

"வேலூர் மாவட்டத்திலும் ஒரு அறிவாலயம் உருவாகி வருகிறதே?"

"ஆமாங்க தலைவரே, தி.மு.க.வின் தலைமை அலுவலகத்துக்காக 88-ல் சென்னை அண்ணாசாலையில் பிரமாண்டமான முறையில் அண்ணா அறிவாலயத்தை உருவாக்கினார் கலைஞர். இதைத் தொடர்ந்து திருச்சி, விழுப்புரம் ஆகிய ஊர்களிலும் மாவட்ட தி.மு.க.வுக்காக கலைஞர் அறிவாலயம் என்ற பெயரில் கட்சி அலுவலகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் வேலூரிலும் இப்படியொரு மாவட்டக் கழக




www.nakkheeran.in

## ஈரானிலிருந்து மீட்கப்பட்ட 110 மாணவர்கள் இந்தியா வந்தடைந்தனர்

அலுவலகத்தைத் திறக்கவேண்டும் என்று தி.மு.க. தொண்டர்கள் கனவு கண்டுவந்தனர். தி.மு.க.வின் பொதுச்செயலாளரான அமைச்சர் துரைமுருகனே அங்கு இருந்தும், தொண்டர்களின் கனவு நிறைவேறவில்லை. இந்த நிலையில் வேலூர் தி.மு.க. மா.செ.வும் அணைக்கட்டு எம்.எல்.ஏ.வுமான நந்தகுமார், தனது அணைக்கட்டு தொகுதியிலேயே கட்சிப் பெயரில் இடம் வாங்கி, 1.25 கோடி செலவில் 1500 சதுர அடியில் கலைஞர் அறிவாலயத்தை உருவாக்கிவருகிறார். இதை ஜூன் 25ஆம் தேதி முதல்வர் ஸ்டாலின் திறந்துவைக்க விருக்கிறார்.இந்த அறிவாலயத்தின் முன் 9 அடி உயரத்தில் கலைஞரின் வெண்கலைச் சிலை ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. இதுகுறித்து நம்மிடம் பேசிய எம்.எல்.ஏ. நந்தகுமார், 'இது கட்சி அலுவலகமாக மட்டும் செயல்படாமல், கோரிக்கையோடு வரும் பொதுமக்களுக்கு உதவி செய்யும் இடமாகவும், மாணவ-மாணவிகளுக்கு வழிகாட்டும் மையமாகவும் இயங்கும்' என்கிறார் பூரிப்பாக"

"ரெட்கிராஸ் அமைப்பின் மீது இந்துத்துவா அமைப்பினர் கண் வைத்திருப்பதாகச் சொல்கிறார்களே?"

"தமிழக ரெட்கிராஸ் அமைப்பில் கோடிக் கணக்கான நிதி இருக்கிறது. இதன் தலைவராக இருப்பவர் கவர்னர் ரவிதான். இந்த நிலையில் ரெட்கிராஸ் அமைப்பில் குவிந்து கிடக்கும் நிதி கண்ணை உறுத்தியதால், இந்துத்துவா சக்திகள் அதற்குள் நுழையும் முயற்சியில் இருக்கின்றன. இதன் அடையாளமாக பா.ஜ.க.வின் மாநிலத் துணைத் தலைவரான திருப்பதி நாராயணன் போன்றோர், 'ரெட்கிராஸ் அமைப்பை மீண்டும் கட்டமைக்க வேண்டும். முக்கியமானவர்களைச் சேர்க்கவேண்டும்' என்று குரல் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். 'சேவைக்கான அமைப்பிற்குள், தங்கள் தேவைக்காக இவர்கள் நுழைய நினைக்கிறார்கள்' என்று கமலாலயத் தரப்பில் இருந்தே கமெண்ட்டுகள் வருகின்றன."



கலைஞர் அறிவாலயம்

"தமிழகத்தைச் சேர்ந்த பெண் அதிகாரி கேரள காவல்துறையில் உயர்பதவியில் அமர்ந்திருக்கிறாரே?"

"உண்மைதாங்க தலைவரே, திருச்சி மண்ணச்சநல்லூரைச் சேர்ந்த நிஷாந்தி. இவர் 2008ஆம் ஆண்டு கேரள கேடர் ஐ.பி.எஸ். அதிகாரி. திருவனந்தபுரம் சரக டி.ஐ.ஜி.யாக இருந்த இவர், கடந்த வருடம் சொந்த காரணங்களுக்காக 10 மாத விடுப்பில் சென்றிருந்தார். விடுமுறை முடிந்த பின், கடந்த இரு தினங்களுக்கு முன் பணியில் சேர்ந்த அவரை, கேரள நுண்ணறிவுத்துறை டி.ஐ.ஜி.யாக நியமித்திருக்கிறது அங்குள்ள காவல்துறை. இது திருச்சி பகுதி பெண்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியிருக்கிறது."

**"நானும் எனக்கு வந்த ஒரு முக்கியமான தகவலைப் பகிர்ந்துக்கறேன். பா.ஜ.க. கூட்டணியில் அ.தி.மு.க. சேர்ந்ததில் ஏகத்திற்கும் மன வருத்தத்தில் இருக்கும் மாஜி மந்திரி ஜெயக்குமார், இப்போது தி.மு.க.வில் சேர்வதற்காகத் தூது விட்டிருக்கிறாராம். இவரைக் கட்சியில் சேர்த்தால் என்ன மாதிரியான சாதக பாதகங்கள் ஏற்படும் என்று, தயக்கத்தோடு அறிவாலயத் தரப்பு இப்போது விவாதம் நடத்திவருகிறதாம்."**

●



நிஷாந்தி



கலெக்டர் ராஜகோபால் சுங்கரா

# டாஸ்மாக்! ED அதிகாரிகளை வறுத்தெடுத்த நீதிமன்றம்!

டாஸ்மாக் விவகாரத்தில் தி.மு.க. அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் செயல்படும் அமலாக்கத்துறையின் நடவடிக்கைகளுக்கு தொடர்ச்சியாகக் குட்டு வைத்து வருகின்றன நீதிமன்றங்கள். வழக்கு விசாரணையின்போது நீதிபதிகள் எழுப்பும் கேள்விகளால் திணறுகிறது அமலாக்கத்துறை.

தமிழக அரசின் டாஸ்மாக் நிர்வாகத்தில் சட்டவிரோத பணப் பரிவர்த்தனை நடப்பதாக வந்த புகார்களின் அடிப்படையில் ரெய்டு நடத்திய அமலாக்கத்துறை, 1000 கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் நடந்திருப்பதாகக் குற்றம்சாட்டியது. கிடைத்த ஆவணங்களின் அடிப்படையில் இந்த குற்றச்சாட்டை சுமத்தியது அமலாக்கத்துறை.

இதனையடுத்து, டாஸ்மாக் நிர்வாக இயக்குநர் விசாகன் ஐ.ஏ.எஸ். உட்பட பல்வேறு அதிகாரிகளின் வீடுகளில் சோதனை நடத்தியதுடன், அவர்களுக்கு சம்மன் அனுப்பி வரவழைத்து விசாரணையையும் நடத்தியது.

அந்த விசாரணையில் விசாகன் உள்ளிட்ட அதிகாரிகள் ஒப்புவித்த வாக்குமூலங்களின் அடிப்படையில், திருச்சி முன்னாள் மேயர் புனிதவள்ளி பழனியாண்டி பேரன் ரத்தீஸ், சினிமா தயாரிப்பாளர் ஆகாஸ்பாஸ்கரன், கே.எஸ்.மார்ட் சொல்யூசன்ஸ் கேசவன், தொழிலதிபர் விக்ரம் ரவீந்திரன் உள்ளிட்டவர்களுக்கு எதிரான நடவடிக்கையில் குதித்தனர் அமலாக்கத்துறையினர்.

அதன் தொடர்ச்சியாக ஆகாஸ் பாஸ்கரன், விக்ரம் ரவீந்திரன் தொடர்புடைய இடங்களில் அதிரடி சோதனை நடத்தினர். இவர்களுக்குச் சொந்தமான வீடுகள், அலுவலகங்களுக்கு சீல் வைக்கப்பட்டது. அதேசமயம், ரெய்டுக்கு அமலாக்கத்துறை வருவதை அறிந்ததும் தலைமறைவானார் ரத்தீஸ்.

இதனால் சென்னையில் ரத்தீஸுக்குச் சொந்தமான எம்.ஆர்.சி. நகர் பங்களாவில் சோதனை செய்ய முடியாததால், அவரது பங்களாவுக்கும் சீல் வைத்தனர். அமலாக்கத்துறையின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக கடும் விமர்சனங்கள் எழுந்தன.

இந்த நிலையில்தான், அமலாக்கத்துறையின் நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கவும், பங்களாக்களில் வைக்கப்பட்ட சீலை அகற்றவும் வலியுறுத்தி ஆகாஸ் பாஸ்கரனும்,



விக்ரம் ரவீந்திரனும் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு மீதான விசாரணை, நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், வி.லட்சுமிநாராயணன் பெஞ்சில் கடந்த 17-ந்தேதி விசாரணைக்கு வந்தது. அப்போது, இவர்கள் இருவரிடமும் எதன் அடிப்படையில் விசாரணை நடத்த முடிவு செய்யப்பட்டது; சோதனை நடத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றை சீலிடப்பட்ட கவரில் தாக்கல் செய்தார் அமலாக்கத்துறையின் சிறப்பு வழக்கறிஞர் என்.ரமேஷ்.


விசாகன்


ஆகாஸ் பாஸ்கரன்


ரத்தீஸ்

இதனையடுத்து தங்கள் தரப்பின் கருத்தினை முன்வைத்த அமலாக்கத்துறை வழக்கறிஞர், டாஸ்மாக் விவகாரத்தில் இவர்களுக்கான தொடர்புகளை சுட்டிக் காட்டிவிட்டு, "சட்ட விரோத பணப் பரிவர்த்தனை தடுப்புச் சட்டத்தின் படி, சட்டவிரோதமாக பணப்பரிமாற்றம் நடந்திருப்பதற்கான அடிப்படை முகாந்திரம் இருந்தாலே போதும், சம்மந்தப்பட்ட இடங்களில் ரெய்டு நடத்தலாம். அதனடிப்படையில் ஆகாஸ் பாஸ்கரன், விக்ரம் ரவீந்திரன் தொடர்புடைய இடங்களில் ரெய்டு நடத்தப்பட்டது" என்றார்.

ஆனால் இதனை ஏற்கமறுத்த நீதிபதிகள், 'இந்த நீதிமன்றத்தில் அமலாக்கத்துறை தாக்கல் செய்த பதிலுக்கும், உங்களின் வாதங்களுக்கும் தொடர்பில்லாமல் இருக்கிறது, ஒத்துப்போக வில்லை. வீட்டை சீல்வைக்க அமலாக்கத்துறைக்கு அதிகாரம் இருக்கிறதா? அதிகாரம் இருந்தால், எந்த சட்டப் பிரிவின் கீழ் அந்த அதிகாரம் இருப்பதை விவரியுங்கள்' என்று கிடுக்கிப்பிடி போட்டனர்.

இதில் சற்று மிரண்டுபோன அமலாக்கத் துறை வழக்கறிஞர், "சோதனைகள் செய்யப்பட வேண்டிய வீடுகள், அலுவலகங்கள் பூட்டப்பட்டி ருந்தால் சீல் வைக்க அதிகாரம் இல்லை. ஆனால், பிரிவு 17-ன்படி, பூட்டிக் கிடக்கும் வீட்டை உடைக்க அதிகாரம் இருக்கிறது. இந்த வழக்கில், வீடு சீல் வைக்கப்படவில்லை. எங்களின் அனுமதியில்லாமல் கதவை திறக்க வேண்டாம் என நோட்டீஸ்தான் ஒட்டியுள்ளோம்" என்றார்.

இந்த பதிலிலும் திருப்தியில்லாத நீதிபதிகள், "நீங்கள் சொல்லும் பதிலுக்கு என்ன அர்த்தம்? ஒருவர் தன்னுடைய வீட்டுக்குள் நுழைய உங்களிடம் (அமலாக்கத்துறை) அனுமதி வாங்க வேண்டுமா? உங்களுக்கு நோட்டீஸ் ஒட்டுவதற்கு அதிகாரம் இல்லாதபோதும் ஒட்டுகிறீர்கள் என்றால் இது சாதாரணமானது கிடையாது, எளிதாகவும் எடுத்துக்கொள்ள முடியாது. சட்டவிரோதமான உங்கள் நடவடிக்கையை சட்டப்பூர்மானதாக மாற்ற முயற்சிக்கிறீர்கள்" என்று கடுமையாக குட்டு வைத்தனர்.

நீதிபதிகளின் கடுமையை உணர்ந்ததும், நோட்டீசை உடனடியாக திரும்பப் பெற்றுக் கொள்கிறோம்; கைப்பற்றப்பட்ட மின்னணு சாதனங்களையும் ஒப்படைக்கிறோம் என்று தெரிவித்தது அமலாக்கத்துறை.

இதனையடுத்து ஆகாஸ்பாஸ்கரன் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் விஜய்நாராயண், "டாஸ்மாக் விற்பனையாளர்களுக்கு எதிராக பார் உரிமையாளர்கள் தொடர்ந்த வழக்கில் (2014 முதல் 2021 வரை வரையிலான முறைகேடுகள்) அடிப்படையில் ஆகாஸ்பாஸ்கரன் வீடுகளில் சோதனை நடத்தப்பட்டது. ஆனால், முறைகேடுகள் நடந்ததாக சொல்லப்பட்ட காலத்தில் பள்ளிக்கூடம் சென்றுகொண்டிருந்தார் ஆகாஸ்பாஸ்கரன்" என்று வாதிட்டார். இதைத்தொடர்ந்து, டாஸ்மாக் முறைகேடு விவகாரத்தில் ஆகாஸ்பாஸ்கரன் மற்றும் விக்ரம்ரவீந்திரன் ஆகியோருக்கு தொடர்பிருக்கும் ஆதாரங்களை 18-ந்தேதி தாக்கல் செய்யவேண்டும் என உத்தரவிடப்பட்டது. 18-ந் தேதி வழக்கின் விசாரணை வந்தபோது, அமலாக்கத்துறை சார்பில் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இதனையடுத்து ஆஜரான அமலாக்கத்துறை

ஐ.எஸ்.ஐ.எஸ்-க்கு ஆள் திரட்டியதாக புகார்: கோவையில் இருவர் கைது



www.nakkheeran.in

# தூத்துக்குடியில் நிலப் பிரச்சினையில் தம்பதிக்கு அரிவாள் வெட்டு: தந்தை, மகனுக்கு சிறைத் தண்டனை

யின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ராஜு, "டாஸ்மாக் விவகாரம் தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. அதுவரை இந்த வழக்கில் உயர் நீதிமன்றம் காத்திருக்கலாம்'' என்றார். அப்போது, ''வழக்கு நிலுவையில் இருக்கும் போது உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுக்கு காத்திருக்காமல் ரெய்டு நடத்தியது ஏன்? நீங்கள் ஏன் காத்திருக்கவில்லை?'' என்று கேள்வி எழுப்பிவிட்டு, "இந்த வழக்கில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்" என்ற உயர் நீதிமன்ற நீதிபதிகள், விசாரணையை ஒத்திவைத்துள்ளனர்.

தங்களின் எல்லை மீறிய நடவடிக்கைகளுக்காக சென்னை உயர் நீதிமன்றத்தில் தற்போது குட்டு வாங்கியுள்ளது அமலாக்கத்துறை.

ஏற்கனவே, டாஸ்மாக் நிர்வாக தலைமை அலுவலகத்தில் நடத்தப்பட்ட சோதனைகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு தொடர்ந்த மேல் முறையீட்டு வழக்கில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் கபில்சிபில், "டாஸ்மாக்கில் கடந்த 2017ம் ஆண்டு முதல் பல தனி நபர்கள் பணம் பெற்றது தொடர்பாக தமிழ்நாடு அரசு வழக்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகிறது. ஆனால் தற்போது அமலாக்கத்துறையினர் விசாரணை என்ற பெயரில் தங்கள் வரம்பை மீறி செயல்பட்டு வருகின்றனர்.

ஒரு அலுவலகத்தில் அத்துமீறி அதன் செயல்பாட்டை முடக்கும்விதமாக கணினி, பென்டிரைவ், மொபைல் போன் உள்ளிட்ட அனைத்தையும் முடக்கி உள்ளனர். தனிப்பட்ட நபர்கள் செய்த குற்றத்திற்காக அவர்கள் மீது தமிழ்நாடு அரசே நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், அமலாக்கத்துறை டாஸ்மாக் அலுவலகத்துக்கு வந்து இதுபோன்று விசாரணை நடத்துவது எந்த வகையிலும் ஏற்கக்கூடியது கிடையாது. இந்த விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் தலையிட்டு உத்தரவு பிறப்பிக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

அப்போது இதற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்த அமலாக்கத்துறையின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ராஜு, 'டாஸ்மாக் விவகாரத்தில் ஆயிரம் கோடி ரூபாய்வரை முறைகேடு நடந்துள்ளது. அதுகுறித்த விவரங்களை உயர் நீதிமன்றத்தில் நடந்த விசாரணையின்போது தெரிவித்தோம்'' என்றார்.



தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய்

இருதரப்பு வாதங்களையும் கேட்ட தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் மற்றும் நீதிபதி அகஸ்டின் ஜார்ஜ் ஆகியோர், ''டாஸ்மாக் முறைகேடு விவகாரங்களில் தனிநபருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யலாம். ஒரு நிறுவனத்துக்கு எதிராக எவ்வாறு வழக்குப் பதிவு செய்ய முடியும்? இந்த விவகாரத்தில் அமலாக்கத்துறை அனைத்து வரம்புகளையும் மீறியுள்ளது. டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் அமலாக்கத்துறை விசாரணை நடத்தியது வரம்பு மீறிய செயல். இத்தகைய நடவடிக்கைகள் அமலாக்கத் துறையின் அதிகார வரம்புக்குள்ளும் அடங்காது. இது கூட்டாட்சி தத்துவத்தையே சிதைப்பதாக இருக்கிறது. டாஸ்மாக் அலுவலகத்தில் சோதனை உட்பட அனைத்து நடவடிக்கைகளுக்கும் உச்ச நீதிமன்றம் தடை விதிக்கிறது" என்று தெரிவித்த நீதிபதிகள், அமலாக்கத்துறை பதிலளிக்க நோட்டீஸையும் பிறப்பித்தனர். மேலும், வழக்கு விசாரணையை கோடைகால விடுமுறைக்குப் பிறகு ஒத்திவைத்தது உச்ச நீதிமன்றம்.

ஆக, அமலாக்கத்துறைக்கு ஏற்கனவே உச்சநீதிமன்றம் குட்டு வைத்த நிலையில், தற்போது சென்னை உயர்நீதிமன்றமும் குட்டு வைத்திருக்கிறது. இதனால் தமிழக அரசும் மற்றும் ஆகாஸ் பாஸ்கரன், விக்ரம்ரவீந்திரன், கே.எஸ்.மார்ட் கேசவன், ரத்தீஸ் உள்ளிட்டவர்களும் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர். ஆனால், கோடை விடுமுறை முடிந்து ஜூலை 14-ந் தேதி உச்ச நீதிமன்றம் தொடங்குகிறது.

இந்த வழக்கின் விசாரணை எடுத்துக் கொள்ளப்படும்போது, முறைகேடுகளில் சிக்கியுள்ளவர்களுக்கும் எதிரான பல்வேறு ஆதாரங்களை தாக்கல் செய்து அதனடிப்படையில் அழுத்தமான வாதங்களை முன்வைக்க அமலாக்கத் துறை தயாராகியிருக்கிறது. இதற்காக, அமலாக்கத் துறையில் இயங்கிவரும் ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன் டீம் ஒன்று, ஆழமான பாயிண்டுகளை ரிப்போர்ட்டாக கொடுத்துள்ளது. அதனடிப்படையில் பதில் மனுவை தயாரித்துள்ளது அமலாக்கத் துறை. அந்த பதில் மனு, தி.மு.க.வின் தூக்கத்தைக் கெடுக்கும் என்கிறது அமலாக்கத்துறை வட்டாரம்.

**-இரா.இளையசெல்வன்**

## பாரம்பரியமிக்க சித்த மருத்துவ சிகிச்சை

# சேலம் சிவராஜ் சித்த வைத்திய சாலை

அண்ணா பூங்கா பின்புறம், தமிழ்ச்சங்கம் ரோடு வழியாக, ராஜாராம் நகர், சேலம் – 7.

: 98427 22500, 98427 13500 ☎ : 0427 - 4265300 E-mail : sales@sivarajsiddha.com

7 தலைமுறைகள், 212 வருடங்கள் பாரம்பரியம் கொண்ட எங்கள் வைத்திய சாலையில் தவறான பழக்கவழக்கத்தால் ஏற்பட்ட ஆண்மை குறைவு, நரம்பு தளர்ச்சி, ஹார்மோன் குறைபாடு, உயிரணுக்கள் குறைவு, இல்லறத்தில் பிரச்சினை, குழந்தையின்மை, ஆண்களுக்கான குறைபாடுகள், கருவுற்றல் கோளாறுகள் மற்றும் நாட்பட்ட நோய்களுக்கு சித்த மருத்துவம் மூலம் தலைசிறந்த மருத்துவர்களை கொண்டு சிறந்த நிவாரணம் வழங்கப்படுகிறது.

**தினசரி காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை**



Dr.சிவராஜ் சிவகுமார்

### சென்னை கிளை
10/4 வீரபத்திரன் தெரு, வள்ளுவர் கோட்டம் அருகில்,
VIP கேட்டின் எதிரில், நுங்கம்பாக்கம்,
சென்னை–34.
M: 97888 27500, 044-28230072

### ஈரோடு கிளை
பெருந்துறை ரோடு, செந்தில் நரம்பியல் எதிரில்,
கோவை மெடிக்கல் ரோடு வழியாக, 36, காந்தி நகர்,
வாட்டர் டேங்க் ரோடு, ஈரோடு.
M: 98427 39500, 0424-2259332

### ஒசூர் கிளை
M-13, ஆவலப்பள்ளி ஹட்கோ, ஸ்டேட் பேங்க் பின்புறம்
அத்வைத் பள்ளி அருகில், பாகலூர் ரோடு, ஒசூர்.
M : 81108 03500

### திருப்பத்தூர் கிளை
88/3, காந்தி ரோடு, GH எதிரில்
M: 74488 11500



Dr.சிவராஜ் சிபி

## ஒவ்வொரு மாதமும் இதே தேதிகளில் சந்திக்கலாம். (விடுமுறை நாட்களிலும் முகாம் உண்டு)

**திருச்சி**
1ம், 9ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் அபிராமி
சென்ட்ரல் பஸ்நிலையம்,
பெரியார் சிலை அருகில்.

**திருப்பூர்**
1ம் தேதி காலை 6 முதல் மதியம் 12 வரை
14ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை
SAP ரெஸிடென்ஸி
111, முனிசிபல் ஆபீஸ் ரோடு.

**தஞ்சை**
2ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் காசி இன்
1493, தெற்கலங்கம்,
பழைய பேருந்து நிலையம்.

**கும்பகோணம்**
2ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் திருமால்
ஜான்செல்வராஜ் நகர்,
புதிய பஸ்நிலையம் அருகில்.

**நாகர்கோவில்**
2ம் தேதி.
காலை 6 முதல் மாலை 5 வரை,
ஹோட்டல் கங்கா பேலஸ்
K.P. ரோடு, செட்டிகுளம், ஜங்சன்.

**நெல்லை**
3ம், 23ம் தேதியும்,
காலை 6 முதல் மாலை 5 வரை,
பரணி லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில், மதுரை ரோடு.

**விழுப்புரம்**
3ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஆதித்யா
தேர் விநாயகர் கோவில் &
புதிய பஸ்நிலையம் எதிரில், கே.கே.நகர்.

**காஞ்சிபுரம்**
4ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
வசந்த் வில்லா
T.K.நம்பி வீதி, வெங்குடி மருத்துவமனை &
பெண்கள் காலேஜ் பஸ் ஸ்டாப் அருகில்.

**மதுரை**
4ம், 22ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
காலேஜ் ஹவுஸ்
டவுன் ஹால் ரோடு.

**கள்ளக்குறிச்சி**
4ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
AKT லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில்.

**தேனி**
7ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் தேனி இண்டர்நேசனல்
பழைய பஸ் நிலையம் அருகில்,
மதுரை ரோடு.

**திண்டுக்கல்**
8ம், 24ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஐஸ்வர்யா
ஸ்பென்ஸர் காம்பௌண்ட்,
பஸ் நிலையம் எதிரில்.

**திருவண்ணாமலை**
9ம், 22ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
ராதா லாட்ஜ், 94, சின்ன கடை வீதி.

**வேலூர்**
11ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ரெங்கா லாட்ஜிங் ஹவுஸ்
3, தென்னைமரம் தெரு.

**கடலூர்**
11ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் CAR லாட்ஜ்
62, லாரன்ஸ் ரோடு.

**சிதம்பரம்**
11ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஜெயராம்
35, 36, SP கோயில் தெரு.

**மாயவரம்**
12ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
அல்-முஜம்மில் லாட்ஜ்
பழைய பஸ்நிலையம் அருகில்.

**நாகப்பட்டினம்**
12ம் தேதி
மதியம் 2 முதல் மாலை 5 வரை
நியூ குமார் லாட்ஜ்
புதிய பஸ் நிலையம் அருகில்.

**மன்னார்குடி**
13ம் தேதி
காலை 6 முதல் மதியம் 12 வரை
ஹோட்டல் காவேரி லாட்ஜ்
புதிய பஸ் நிலையம் அருகில்.

**புதுக்கோட்டை**
13ம் தேதி, மதியம் 2 முதல் மாலை 5 வரை
26ம் தேதி, காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ராயல் பார்க்
புதிய பஸ்நிலையம் எதிரில்.

**கோவை**
13ம், 26ம் தேதியும்
காலை 6 முதல் மாலை 5 வரை
OYO ROOMS (கோடா ஓட்டல்)
294, ராஜவீதி, ஸ்ரீ லட்சுமி லாட்ஜ் எதிரில்.

**கரூர்**
14ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஆர்த்தி ஹோட்டல்
திண்ணப்பா தியேட்டர் & பஸ்நிலையம் அருகில்.

**புதுவை**
16ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் ஸ்ரீ சப்தகிரி
பஸ் நிலையம் எதிரில்.

**தென்காசி**
18ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
கிருஷ்ணா டூரிஸ்ட் ஹோம்
2, பழைய பஸ் நிலையம் ரோடு.

**கிருஷ்ணகிரி**
20ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஸ்ரீ வெங்கடேஸ்வரா லாட்ஜ்
239, பெங்களூர் ரோடு.

**ஆரணி**
21ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஸ்ரீ சாய் சுவாமி லாட்ஜ்
பஸ் நிலையம் அருகில்.

**ராம்நாடு**
24ம் தேதி
காலை 6 முதல் மாலை 5வரை
ஹாஜா பேலஸ்
துரைராஜ் சத்திரம் வீதி.

**சிவகாசி**
25ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
மணீஸ் லாட்ஜ்
பஸ் நிலையம் பின்புறம்.

**பொள்ளாச்சி**
27ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
சக்தி ஹோட்டல்
144, கோவை ரோடு.

**மேட்டுப்பாளையம்**
28ம் தேதி
காலை 6 முதல் மாலை 5 வரை
ஹோட்டல் காவேரி
K.G.C.காம்ப்ளக்ஸ், மெயின் ரோடு.

சிவராஜ் சித்த மருந்துகளை www.sivarajsiddha.com ஆன்லைன் மூலம் மருந்து பெறலாம். G Pay Paytm 98427 22500



7 தலைமுறைகள், 212 வருடங்கள்
பாரம்பரியம் கொண்ட நிறுவனம்.

Advt



அமித்ஷாவுடன் வெங்கடேசன்



எல்.முருகனுடன்

# சவால்விட்ட மிளகாய்ப்பொடி வெங்கடேசன்!

## –காப்புமாட்டிய தமிழக காவல்துறை!



மிளகாய்ப்பொடி வெங்கடேசன்

கடந்த வாரம் உள்துறை அமைச்சர் அமித்ஷாவை மதுரையில் வரவேற்ற பிரமுகராக ஊடகக் கவனத்தை ஈர்த்த மிளகாய்ப்பொடி வெங்கடேசனை, கட்டப்பஞ்சாயத்து, துப்பாக்கி காட்டி மிரட்டிய குற்றங்களுக்காக உள்ளே தூக்கி வைத்துள்ளது தமிழக போலீஸ்!

கடந்த ஜூன் 7-ஆம் தேதி மதுரைக்கு வந்த உள்துறை அமைச்சர் அமித்ஷாவை, தமிழக பா.ஜ.க. ஓ.பி.சி. பிரிவு தலைவர் மிளகாய்ப்பொடி வெங்கடேசன் வரவேற்றார். அந்த புகைப்படத்தை, எக்ஸ் சமூக வலைத்தளத்தில் பதிவேற்றி சுடச்சுட தமிழக காவல்துறை, ஆந்திர காவல்துறை, தெலுங்கானா காவல்துறை, பா.ஜ.க. பிரபலங்கள், தி.மு.க. ஐ.டி. பிரிவு என பல இடங்களுக்கும் வெங்கடேசன் டேக் செய்து, தேசிய அரசியல் கட்சியில் நான் எந்தளவுக்கு உயரத்தில் இருக்கிறேன், என்னை கைதுசெய்ய முடியுமா? என காவல்துறைக்கே சவால்விட்டு பலரையும் தெரிந்தே வம்புக்கு இழுத்தார்.

www.nakkheeran.in

வினோத் பி.செல்வத்துடன்







கைப்பற்றிய துப்பாக்கி

மிளகாய்ப்பொடி வெங்கடேசன் (வெங்கடேஷின் தாயார் மிளகாய்ப்பொடி வியாபாரம் செய்துவந்துள்ளார். அதனால் மிளகாய்ப்பொடி வெங்கடேசன் என ஏரியாக்களில் இவர் பெயர் பிரபலமானது) மேல் தமிழகத்தில் மட்டும் 60-க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன. ஆந்திரா, தெலுங்கானாவிலும் இவர் மீது 40 வழக்குகள் வரை உள்ளன. சில மாதங்களுக்கு முன் தமிழக போலீசால் குண்டர் தடுப்புச் சட்டத்திலும் கைது செய்யப்பட்டார் இந்த வெங்கடேசன்.

இத்தகைய நபர், போலீஸை டேக் செய்து புகைப்படம் போடுவதா எனப் பார்த்தது காவல்துறை. தக்க பாடம் புகட்ட அவர்மீதான முக்கிய வழக்குகளை எல்லாம் தூசிதட்டியது. ரியல் எஸ்டேட் அதிபரான கண்ணன் என்பவரை துப்பாக்கி காட்டி மிரட்டியது போன்ற பல வழக்குகள் அவர்மீது இருந்தன.

கூடவே நுங்கம்பாக்கத்திலுள்ள பானசோனிக் நிறுவனத்தில் துணைமேலாளராக இருக்கும் தீபன்சக்கரவர்த்தி என்பவரை மிரட்டிய வழக்கும் இருந்தது. பாடியநல்லூரைச் சேர்ந்த கணபதிலால் என்பவருக்கு 48 லட்சத்துக்கு எலெக்ட்ரிக் சாதனங்களை விநியோகம் செய்துள்ளார் தீபக். ஆனால் வாங்கிய பொருட்களுக்கு கணபதி பணம்தராத நிலையில், பணத்தை திரும்பவாங்க வெங்கடேசனை அணுகியுள்ளார் தீபக். ஒரு தொகை பேசி, முதலில் 1 லட்சம் அட்வான்ஸ் கேட்டுள்ளார் வெங்கடேசன். அட்வான்ஸ் கொடுத்தும், கணபதியிடமிருந்து பணத்தை வாங்கித்தராத நிலையில் கொடுத்த பணத்தை தீபன் சக்கரவர்த்தி கேட்க, தீபக்குக்கு வெங்கடேசனும், கணபதிலாலும் சேர்ந்து கொலைமிரட்டல் விடுத்துள்ளனர்.

இந்த வழக்கையும் சேர்த்து கையிலெடுத்த செங்குன்றம் காவல்துறை, நான்கு பிரிவுகளில் வழக்குப் பதிவுசெய்து, வெங்கடேசனையும் அவரோடு சேர்ந்து தீபனை மிரட்டிய கணபதிலால், கோகுலவாசன் மூவரையும் கைதுசெய்து சிறையிலடைத்துள்ளது.

போலி ஆவணங்கள் தயாரித்து அதன்மூலம் நிலத்தை அபகரிக்க முயன்றதாக ஆவடி காவல் ஆணையரகத்தில் பதிவுசெய்யப்பட்ட எஃப்.ஐ. ஆரில் மிளகாய்ப்பொடி வெங்கடேசன் கைதுசெய்யப்பட்டார். இதுதவிர மற்றொரு எஃப்.ஐ.ஆரில் போலி ஆவணங்கள் தயாரித்து ரூ.18 கோடி ரூபாய்க்கு மேல் மோசடி செய்ததாகவும் கைத்துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதாகவும் பதிவான குற்றச்சாட்டில் கே.ஆர்.வெங்கடேசனும், சீனிவாசனும் கைதுசெய்யப்பட்டனர். இதில் ஏ1 ஆன வெங்கடேசனிடமிருந்து இரு கைத்துப்பாக்கி

www.nakkheeran.in

பல நேரங்களில் ஒரு புத்திசாலியால் சாதிக்க முடியாததை, ஒரு பொறுமைசாலி சாதித்துவிடுகிறான்!



நயினாருடன்



ஆடுமலையுடன்



கேசவவிநாயகத்துடன்



அனுராக் தாக்கூருடன்

களும், ஏ2 ஆன சீனிவாசனிடமிருந்து ஒரு துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டுள்ளன. வேறுபல வழக்குகளையும் தமிழக காவல்துறை தூசிதட்ட ஆரம்பித்துள்ளது.

இதையடுத்து பா.ஜ.க. அவசர அவசரமாக வெங்கடேசனை, பா.ஜ.க. ஓ.பி.சி. பிரிவு மாநிலச் செயலாளர் பதவியிலிருந்தும், அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கியுள்ளது.

## யார் இந்த மிளகாய்ப்பொடி வெங்கடேசன்?

பர்மாவிலிருந்து தமிழகத்துக்குக் குடிபெயர்ந்தது வெங்கடேசனின் குடும்பம். ஆரம்பகாலத்தில் வறுமையால் சவுதி அரேபியாவில் ஒட்டகம் மேய்க்கப்போன வெங்கடேசன், சில காலம் மட்டுமே இங்கிருந்தார். தனது தாயார் இறந்ததால் தமிழகம் திரும்பினார். அதன்பிறகுதான் அடிதடி, மோசமான நண்பர்களின் பழக்கம் என வாழ்க்கை திசைமாறியது.

இந்தக் காலகட்டத்தில்தான் இவருக்கு செம்மரக் கடத்தலும் அதனால் ஏற்படும் ஆதாயமும் பற்றித் தெரியவந்தது. சில பர்மா நண்பர்களின் துணையோடு, ஆந்திராவிலிருந்து செம்மரக் கடத்தலில் ஈடுபடத் தொடங்கினார். இதனால் ஆந்திர காவல்துறை இவர்மீது ஒரு கண் வைத்திருந்தது. சந்திரபாபு நாயுடுவின் முந்தைய ஆட்சிக்காலத்தில், செம்மரக் கடத்தல் பேர்வழிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால் 2015-ல் செம்மரக் கடத்தல் வழக்கில் சிறைபிடிக்கப்பட்டு அடைக்கப்பட்டார்.

செம்மரக் கடத்தலில் மிகப்பெருமளவில் சேர்த்த சொத்தில் மிகப்பெரிய சொகுசு பங்களா கட்டியதோடு, உள்ளேயே தியேட்டர், நீச்சல் குளம், பார் என அவரது வாழ்க்கையின் தரமே மாறியது. அந்தக் காசில் சக ரௌடிகளுக்கு சில்லறைகளை விட்டெறிந்து அவர்களைத் தன் பக்கம் வைத்துக்கொண்டதோடு, போலீஸ் உயரதிகாரிகளையும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளையும் அழைத்து விருந்துவைத்து தன் கைக்குள் வைத்துக்கொள்வதில் கில்லாடி எனவும் பெயர்பெற்றார். இதுவும் போதாது என்றுதான் அரசியல் பக்கம் பார்வையைத் திருப்பினார். முதலில் அ.தி.மு.க. பக்கம் சென்ற பார்வை, தன் மீது தெலுங்கானா, ஆந்திராவிலும் வழக்கிருப்பதால் பா.ஜ.க.வின்

**"கட்சியில் சேர்க்கப்பட்டபோதே அவர் சரித்திரப் பதிவேடு குற்றவாளிதான். செம்மரக் கடத்தல் உட்பட பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருந்தன. இத்தனையிருந்தும் குற்றப் பின்னணியுடைய வெங்கடேசுக்கு ஓ.பி.சி. பிரிவு மாநிலச் செயலாளர் பதவி வழங்கப்பட்டது."**

கரிசனம் தனக்குக் கிடைத்தால் தேசிய அளவில் உதவியாக இருக்கும் என்றுதான் பா.ஜ.க.வுக்குக் குறிவைத்தார்.

செம்மரக் கடத்தலில் சம்பாதித்த பணத்தில், கே.ஆர்.வி. ரியல் எஸ்டேட், கே.ஆர்.வி. கம்பெனி, பைனான்ஸ் உள்பட பல நிறுவனங்களும், 5-ஆம் வகுப்பு வரையான மெட்ரிக்குலேசன் பள்ளியையும் தொடங்கி நடத்திவந்துள்ளார். இது கட்டப் பஞ்சாயத்துத் தொழிலில் கிடைத்த வரவுகளுக்கு கணக்குக் காட்டுவதற்கும், எல்லாம் சட்டரீதி யாகத்தான் சம்பாதிக்கப்படுகிறது என்று காட்டுவதற்குமான ஒரு வாய்ப்பாகவும் அமைந்தது.

வெங்கடேசன் கார் பிரியரும்கூட. வீட்டில் பெராரி, பி.எம்.டபிள்யூ உள்பட 7 கார்கள் உண்டு. ஒவ்வொரு சமயத்துக்கும் ஒரு காரைப் பயன்படுத்துவார். வெறுமனே ஆடம்பரத்துக்காக மட்டுமின்றி, பாதுகாப்பு நோக்கத்திலும் இதைக் கடைப்பிடித்துவந்தார். தற்போது அவரிடமிருந்து 2 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அதில் ஒரு துப்பாக்கி பெரட்டா வகையைச் சேர்ந்தது. மற்றொரு துப்பாக்கி, லாமா வகையைச் சேர்ந்தது. இந்த துப்பாக்கியை வைத்துத்தான் கண்ணனை மிரட்டியுள்ளார் என போலீஸ் தரப்பில் சொல்லப்படுகிறது.

எல்.முருகன் கேட்டுக்கொண்டதற்கிணங்க, பா.ஜ.க.வின் முன்னாள் மாநிலத் தலைவர் பொறுப்பிலிருந்தபோதே, 2021-ல் கட்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர் வெங்கடேசன். அந்தக் காலகட்டத்தில் கட்சியில் சேர்ந்ததும் கட்சி நிதியாக ரூ.50 லட்சம் கொடுத்ததாக பரபரப்பாக பேச்செழுந்தது. அன்று அவர் கட்சியில் சேர்க்கப்பட்டபோதே அவர் சரித்திரப் பதிவேடு குற்றவாளிதான். செம்மரக் கடத்தல் உட்பட பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருந்தன. இத்தனையிருந்தும் குற்றப் பின்னணியுடைய வெங்கடேசுக்கு ஓ.பி.சி. பிரிவு மாநிலச் செயலாளர் பதவி வழங்கப்பட்டது.

இவர், வரவுள்ள சட்டமன்றத் தேர்தலில் மாதவரம் தொகுதியில் போட்டியிடும் திட்டத்தோடு செயல்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. இதற்காகவே கோவில் திருவிழாக்கள், கட்சி நிகழ்ச்சிகள் என அனைத்திலும் பணத்தை தாராளமாக செலவழித்து வந்துள்ளார்.

தேசிய அளவிலான கட்சியில் பதவியில் சேர்ந்தபின்னும் அவரது நடவடிக்கைகளில் மாற்றம் இல்லை. மாறாக, தனது பதவியை, தனது செயல்களுக்கு ஒரு கவசமாகப் பயன்படுத்திக் கொண்டு வழக்கமான செயல்பாடுகளைத் தொடர்ந்துவந்தார்.

இத்தகைய குற்றப் பின்னணியுடைய நபரை, ஒன்றிய உள்துறை அமைச்சருக்கு பொன்னாடை போர்த்துவதற்கான பட்டியலில் எப்படி இடம்பெறச் செய்தனர் என்ற சர்ச்சை எழுந்தது. இதையொட்டி பா.ஜ.க. தலைமை, வெங்கடேசன் பெயரை வரவேற்புக் குழுவில் சேர்த்தவர்கள் யார் என்ற விசாரணையை மேற்கொண்டுவருகிறது.

பா.ஜ.க.வின் அந்த விசாரணை முடிவதற்கு முன்பாகவே, தமிழக காவல்துறை மிளகாய்ப்பொடி வெங்கடேசன், மற்றொரு பா.ஜ.க. நிர்வாகியான மின்ட் ரமேஷ் ஆகியோரை அடுத்தடுத்து கைதுசெய்துள்ளது.

வழக்குகள் நிரூபிக்கப்பட்டால் ஆயுள் தண்டனை பெறுவதற்குக்கூட வாய்ப்பிருக்கிற மிளகாய்ப்பொடி வெங்கடேசன், பா.ஜ.க.வின் அனுராக் தாக்கூர், நயினார், தமிழிசை, எல்.முருகன், ஆடுமலை, வினோத் பி.செல்வம், கேசவவிநாயகம் உள்ளிட்ட தலைவர்களோடு இடம்பெற்றுள்ள புகைப்படங்கள் காணப்படுகின்றன. இத்தனை தலைவர்களில் ஒருவருக்குக்கூடவா வெங்கடேசன் சரித்திரப் பதிவு குற்றவாளி என்று தெரியாமல் போயிருக்கும்?

ஆக, குற்றவாளி எனத் தெரிந்துமே, கட்சியை வளர்ப்பதற்காக இத்தகைய கிரிமினல் நபர்களை கட்சியில் அனுமதித்து இடம்கொடுத்தார்களா என்ற கேள்வியெழுகிறது. பா.ஜ.க. தங்களுக்கான கவசமாக இருக்கும் என நினைத்து கட்சியில் சேர்ந்த பல கிரிமினல்கள், வெங்கடேசனின் கைதால் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர்.

**–க.சுப்பிரமணியன்**



**எவ்வளவுதான் நெருங்கியவர்களானாலும், சில அந்தரங்கங்கள் ஒருவருக்கொருவர் தெரியாத வரையில்தான் சகித்துக்கொள்ள முடிகிறது!**

# கலையும் கழகமும்!



'நீதிதேவன் மயக்கம்' -கமல்ஹாசன்

கொலைக் குற்றத்துக்காக ஒரு ராணுவ வீரன் நீதிமன்ற குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்படுகிறான். அவன் செய்த குற்றம் வாசிக்கப்படுகிறது, வாதிடப்படுகிறது. அது Cold blooded murder என சாட்சியங்களை வைத்து நிரூபிக்கப்படுகிறது. நீதிபதி தன் தீர்ப்பை வாசிக்கும் முன் குற்றவாளி ஏதாவது சொல்ல விரும்புகிறாரா எனக் கேட்கப்படுகிறது. கூண்டிலே நிற்பவர் ராணுவ உயரதிகாரிக்கான ஆடைகளோடு, தன் பணிக்கு கிடைத்த பல முக்கியமான பதக்கங்களை அணிந்துகொண்டு மிகக்கம்பீரமாக நிற்கிறார். ''கனம் நீதிபதி அவர்களே... என்னை ஒரு ராணுவ வீரனாகத் தேர்ந்தெடுத்த பின்னால், பாரத அரசாங்கம் எனக்கு எல்லாவிதமான பயிற்சிகளையும் அளித்தது. அதில் எதிரிகளை எப்படி அழிக்கவேண்டும் என்ற பயிற்சியும் வழங்கப்பட்டது. தீவிர தாக்குதல் நடந்தால் எதிரிகளை எப்படிக் கொன்று குவித்து நம் பாரதமாதாவை, அதன் மக்களை, அதன்

## மகள்களை சாதிக்க வைக்க நினைக்கும் தந்தைகள் தெய்வங்கள்; தந்தைக்காக சாதிக்கும் மகள்கள் தேவதைகள்!



நிலப்பரப்பை எப்படி காப்பாற்ற வேண்டும் என நவீனமயமான பயிற்சிகள் தரப்பட்டன. அதன்படி நானும் பல விரோதிகளை கொன்று குவித்திருக்கிறேன். ஈவிரக்கம் இல்லாத எதிரிகளை, தீவிரவாதிகளைக் கொன்று குவித்தபோதெல்லாம் பாரத அரசாங்கம் என்னைப் பாராட்டி இந்தப் பதக்கங்களை என் நெஞ்சிலே அணிவித்து கௌரவித்தது. பல பதவி உயர்வுகளையும் தந்து மகிழ்ந்தது. பாரதத்தாயைக் காப்பாற்றப் போராடிய எனக்குத் தரப்பட்ட பதக்கங்களும், பாராட்டும் எண்ணிலடங்காதவை. இன்றும் என் கண்முன்னே ஒரு காமக்கொடூரன், கல்லூரியில் படிக்கும் ஒரு இளம்பெண்ணை கற்பழிப்பதை நான் பார்த்தேன். அப்போது அந்தப் பெண் என் பார்வையில் பாரதமாதாவாகவும், அந்தக் காமக்கொடூரன் எல்லைதாண்டி வந்த தீவிரவாதியாகவும் என் கண்ணில் பட்டனர். அதைப்பார்த்த என்னால் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்க முடியவில்லை. அவனைக் கொன்று அந்தப் பெண்ணை மீட்பது என் கடமை எனப்பட்டது. என் உறுதிமொழி கவனத்துக்கு வந்தது... அவனைக் கொன்றேன். ராணுவத்தில் நான் எதிரிகளைச் சுட்டு வீழ்த்திய எண்ணிக்கை ஏற... ஏற... என் நெஞ்சில் இந்தப் பதக்கங்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. இப்போதும் நான் என் கடமையைத்தான் செய்திருக்கிறேன். அதற்காக தாங்கள் எனக்குத் தரப்போவது இன்னும் ஒரு பதக்கமா? அல்லது தூக்குக் கயிறா? எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ள நான் தயார். ஒரே ஒரு வித்தியாசம்... போர்க்களத்திலே நான் கொல்லப்பட்டிருந்தால், தியாகி என்ற பட்டத்துடன் தேசியக்கொடியால் போர்த்தப்பட்டு, முப்பத்தாறு குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் எரிக்கப்பட்டிருப்பேன். இங்கு அதற்கான வாய்ப்பில்லை... பரவாயில்லை. எனக்கு என் கடமையைச் செய்த மனநிறைவு நிச்சயமாக இருக்கும்"

கோர்ட்டில் அவன் பேசி முடித்ததும் அனைவரும் எழுந்து நின்று கைதட்டுவார்கள்.

-இதுதான் 'நீதிதேவன் மயக்கம்' என்ற படத்துக்காக எழுதிய வசனங்கள். இதைப் பேசி நடித்தவர் என் இனிய இளவல் கமல். இந்தக் காட்சியை எழுத எது தூண்டுகோலாக இருந்திருக்கும் என நான் சொல்லவேண்டியதில்லை. என் துரோணரின் பராசக்தியும், கோர்ட்டில் வாதாடும் குணசேகரனும்தான். ஆனாலும் இந்தக் காட்சிக்கும் மக்களிடத்தில் நல்ல வரவேற்பிருக்கிறது.

**தா**சரி நாராயணராவ் சென்னையில் இருந்தபோதே என்னோடு நன்றாகப் பழகுவார். சில காலம் இயக்குநர் பீம்சிங் அவர்களோடும் உதவியாளராகப் பணியாற்றினார். பின்னர் 'மந்திர மூர்த்தி' என்ற என் கதையை இயக்கிய இயக்குநரிடம் உதவியாளராகப் பணியாற்றினார். சரோஜாதேவி, ஹரிநாத் ஆகியோர் நடித்த அந்தப் படத்தின் இயக்குநர் இடையில் காலமானார். அதை முடித்தவர் தாசரி ஸார். அவரது முதல்படம் 'தாத்தா மனவாடு'. இதை தயாரித்தவர் மகாலிங்கபுரம் சரஸ்வதி தெருவில் அலுவலகம் வைத்திருந்த பிரதாப் ஆர்ட் புரொடக்ஷன் கே.ராகவா. இவர்தான் 'சூரிய சந்திரலு' படத்தின் மூலம் என்னை தெலுங்கு இயக்குநராக அறிமுகம் செய்தவர். 'தாத்தா மனவாடு' படத்துக்குப் பிறகு தாசரி ஸார் தெலுங்குப் படவுலகில் முக்கியபுள்ளியாக பார்க்கப்பட்டார். தயாரிப்பாளர்கள் இவர் சம்மதத்துக்காக வரிசையில் காத்திருந்தனர். இவர் படங்களும் தொடர் வெற்றியடைந்தன. பெரிய ஹீரோக்கள் கூட இவர் இயக்கத்தில் நடிக்க ஆர்வம் காட்டினர். நூறு படங்களை இயக்கிய தென்னிந்திய இயக்குநர்களில் முதல் ஆள் இவர்தான். கின்னஸில் இடம் பெற்றார். தென்னிந்திய பிலிம் சேம்பர் தலைவராகவும் இருந்தார்... பெப்சி தலைவராகவும் இருந்தார்.

ஹைதராபாத் போன பின்னால் அரசியலிலும் ஈடுபட்டார். நல்ல பேச்சாளர், பின்னர் காங்கிரஸில் இணைந்து எம்.பி.யானார். அடுத்து மத்திய அமைச்சரானார். என்னிடம் எப்போதும் ஒரு தனிப்பாசம் கொண்டவராக இருந்தார். 'சூரியகாடு', 'கொண்டப்பள்ளி ரத்தையா' ஆகிய இரு படங்கள் இவருக்காக நான் எழுதிய படங்கள். அந்த ஷூட்டிங் நேரத்தில் அவரோடு இருக்கும்படி கேட்டுக்கொண்டார், இருந்தேன். தினமும் மூன்று வேளை



டைரக்டர்-ரைட்டர் **வி.சி. குகநாதன்**

www.nakkheeran.in

சோற்றைவிட உப்புக்கே மதிப்பு அதிகம், ஆனாலும் அது அதிகமானால் சோறே கெடும் -அப்படித்தான் ஆடம்பரமும்... அது அதிகமானால் வாழ்க்கை கெடும்!

யும் சாப்பாடு என்று சொல்ல முடியாது. மூன்றுவேளையும் நான்-வெஜிட்டேரியன் விருந்து தான். என் 'மைக்கேல்ராஜ்' கதையை நான் எல்லா மொழிகளிலும் இயக்கு வதாகத்தான் ராமாநாயுடுவோடு என் ஒப்பந்தம். ஆனால் தாசரி ஸார், தெலுங்குப் படத்தை வெங்கடேஷை வைத்து தானே இயக்க விரும்புவ தாகக் கேட்டார். மறுப்பே பேசாமல் கொடுத்தேன். 'பிரம்ம புத்ருடு' தெலுங்கில் வெங்கடேஷ் நடிக்க வெள்ளிவிழா கண்டது.




Advt


அவருக்கு கிடைத்த மரியாதை, பதவிகள், அந்தஸ்து, அரசியல் அனைத்தும் தமிழ்நாட்டில் நிச்சயமாக எனக்கும் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் என்னைப் பிழிந்தெடுத்து சக்கையாகத் தூக்கியெறிந்தார்கள். அல்லது ஏறி மிதித்து பலர் மேலே ஏறிப் போனார்கள். நான் சிரமப்பட்டு தயாரித்த பல படங்களை அஞ்சுக்கும், பத்துக்கும் ஆயுள்காலத்துக்கும் வாங்கி வைத்துக்கொண்டு சம்பாத்தியமே பெரிதென வாழ்கிறார்களே தவிர, இதை உருவாக்க இவன் எவ்வளவு சிரமப்பட்டிருப்பான் என்பதை சிந்திக்கவே மறுக்கிறார்கள். 'ஏங்க இப்படி?'ன்னு கேட்டால், எல்லாரும் ஒரே மாதிரி பதிலையே சொல்கிறார்கள். 'ஏமாற்றுவது என் தொழில், நீங்க ஏன் ஏமாறுறீங்க?' இதுதான் ஒரே பதில். வாலிப வயதில் போகட்டும் என அமைதியாக இருந்தேன். இனி இந்த எண்பது வயது இளைஞன் ஏமாற மாட்டான். நான் சிவன் மகன் குகன். என் எழுத்துக்கள்... புதிய, படித்த, கற்பனை வளமுள்ள இளைஞர்கள் துணையோடு எல்லா திரைகளிலும் அரங்கேறும். அப்போது தெரியும் இது எலி அல்ல புலி என்று. என் ஏ.சி.சி. சேனல் ஆரம்பித்து ஒரு வருடம் கூட ஆகவில்லை. அறுபது லட்சம் பார்வையாளர்கள். Just wait... These are only rehersals. Main picture yet to come. Don't ever underestimate the power of a common man.

இந்த நாலு வருடங்களுக்குள் நடந்த நல்ல விஷயங்கள்... என் மனைவி சுங்குவார்சத்திரத்தின் அருகே ஒரு தோட்டம், அதில் ஒரு வீடு, ஒரு மினரல் வாட்டர் கம்பெனி நடத்திவருகிறார். பத்து வருடங்களாக நடந்துவரும் அந்த கம்பெனியிலிருந்து மாதாமாதம் நமக்கு அந்த மாதத்துக்கான செலவுக்கான பணம் வந்துவிடும். மூன்று வருடங்களுக்கு முன்னர் மொத்த பாக்டரியும் களவாடப்பட்டதுடன், அடித்து நொறுக்கப்பட்டது. உடனே புகார்கள் மாண்புமிகு முதல்வர் அலுவலகத்திலிருந்து, உள்ளூர் போலீஸ்வரை கொடுக்கப்பட்டது. விசாரணை செய்ய பெண் போலீசார் வந்தனர். உயர் போலீஸ் அதிகாரிகள் போனில் அக்கறையோடு விசாரித்தனர். அதன்பின் இன்றுவரை எதுவும் நடக்கவில்லை. மனைவியின் வாட்டர் கம்பெனி மூன்றரை வருடங்களாக மூடிக் கிடக்கிறது... மொத்தமும் நஷ்டம். பின்னர் கலைஞர் நூற்றாண்டு மகளிர் விருதுக்கு என் மனைவியை விண் ணப்பிக்கச் சொன்னார்கள். அவரும் ஓடி, ஓடி பழைய போட் டோக்களைத் தேடி, விவரங்களைச் சேகரித்து விண்ணப்பம் செய்தார்... அவ்வளவுதான்! அடுத்து இயல், இசை, நாடக மன்றத் துக்கு சென்று 'கலைமாமணி' விருதுக்கு விண்ணப்பித்தார்.

பத்து நாட்கள் முன்பு மனைவியின் செல்போனை ஹேக் பண்ணிட்டாங்க. அதன்மூலம் அவ வங்கியிலிருந்து பணத்தையும் திருடிட்டாங்க. தெரிந்த வக்கீல் மூலம் சைபர் க்ரைமுக்கு ஆன்லைனில் கம்ப்ளைண்ட் கொடுத்தா... இதுவரை எந்த நடவடிக்கையுமே இல்லை. நூறு படங்களுக்கு மேல் நாயகியாக நடித்தவர். ஜனாதிபதி பரிசு வாங்கியவர்... அவருக்கே இந்த நிலைமை?

**(வரும் இதழில் நிறைவடையும்...)**

படம் உதவி: ஞானம்

www.nakkheeran.in

# மூத்த பத்திரிகையாளர் சின்னகுத்தூசி 91-ஆவது பிறந்தநாள் மற்றும் வாழ்நாள் சாதனையாளர் விருது விழா!



ஜூன் 21, 2025 சனிக்கிழமை மாலை 6:00 மணி

**கவிக்கோ அரங்கம்,** எண்: 6, 2-வது மெயின்ரோடு,
சி.ஐ.டி. காலனி (மியூசிக் அகாடமி அருகில்) மயிலாப்பூர், சென்னை - 600 004.







வரவேற்புரை: திருமிகு. **நக்கீரன் கோபால்**

தலைமை: திருமிகு. **க.திருநாவுக்கரசு**
(தலைவர்- சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை)

முன்னிலை: திருமிகு. **கௌரா ராஜசேகர்**
(செயலாளர் - சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை)


விருதுகள் வழங்கி சிறப்புரை:
திருமிகு **பழ.நெடுமாறன்** அவர்கள்

வாழ்த்துரை:
எழுத்தாளர் கதை சொல்லி-
திருமிகு. **பவா செல்லத்துரை**

வாழ்நாள் சாதனையாளர் விருது:
திருமிகு. **திருச்சி செல்வேந்திரன்**
(திராவிட இயக்க சிந்தனையாளர்- கருத்தாளர்)

நன்றியுரை: திருமிகு. **இராயப்பன்**
(அறங்காவலர்- சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை)

தொகுப்பு: திருமிகு. **அருள்செல்வன்**
(அறங்காவலர்- சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை)




**தங்கள் வரவால் விழா சிறக்க அன்புடன் அழைக்கும்...**
**சின்னகுத்தூசி நினைவு அறக்கட்டளை**

Advt



சேலத்தில் தி.மு.க. நிர்வாகிகளைச் சந்தித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், "கட்சிக்கு விரோதமாக செயல்படுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின், காவிரி டெல்டா பாசனத்திற்காக ஜூன் 12ஆம் தேதி, மேட்டூர் அணையைத் திறந்து வைத்தார். இதையொட்டி, முதல்நாள் இரவே சேலம் வந்து சேர்ந்த முதல்வருக்கு, மேட்டூர் அருகே பெரும்பள்ளத்தில் தி.மு.க.வினர் பிரமாண்ட வரவேற்பு அளித்தனர். அங்கிருந்து 11 கி.மீ. தூரம் 'ரோடு ஷோ' சென்ற முதல்வர், மக்களிடம் கோரிக்கை மனுக்களை உற்சாகத்தோடு பெற்றார்.

அன்றிரவு, தனியார் மண்டபத்தில் கட்சி நிர்வாகிகளைச் சந்தித்துப் பேசினார் ஸ்டாலின். மருமகன் சபரீசன் மேற்பார்வையில் இயங்கும் 'பென்' டீம், உளவுப்பிரிவு அறிக்கை என முழுமையான டேட்டாபேஸுடன் கூட்டத்திற்கு வந்திருந்தார் முதல்வர். அதனால் யாருக்கு 'குட்டு', யாருக்கு 'ஷொட்டு' விழும் என கட்சியினர் மத்தியில் பலத்த எதிர்பார்ப்பு நிலவியது.



டி.எம்.செல்வகணபதி




சிவலிங்கம்



ராஜேந்திரன்

"அமைச்சர் ராஜேந்திரன், டி.எம்.செல்வகணபதி, எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகிய மூன்று மா.செ.,க்களையும், மறைந்த வீரபாண்டியாரின் மறு உருவமாகப் பார்க்கிறேன். ஒரு அமைச்சர், இரண்டு எம்.பி.,க்கள் என சேலம் மாவட்டத்திற்கு கிடைத்த இவ்வளவு பெரிய வாய்ப்பு வேறு எந்த மாவட்டத்திற்கும் கிடைத்ததில்லை" என்றார் முதல்வர். மா.செ.க்களுடன் வீரபாண்டியாரை ஒப்பிட்டுப் பேசியதை யாரும் ரசிக்காததால் வழக்கமாக வீரபாண்டியார் பெயருக்கு எழக்கூடிய கரவொலி நிர்வாகிகள் மத்தியில் மிஸ்ஸிங்.



எ.வ.வேலு

"சேலம் மேற்கு மாவட்டத்தில் மேட்டூர், இடங்கணசாலை ஒன்றியங்கள் தவிர மற்ற பகுதிகளில் கட்சி வீக்காக இருக்கிறது. மத்திய மாவட்டத்தில் அஸ்தம்பட்டி, கன்னங்குறிச்சி பகுதிகள் நன்றாக செயல்படுகின்றன. கிழக்கு மாவட்டத்தில் நாலைந்து ஒன்றியங்களில் கட்சி நிர்வாகிகள் நன்றாக செயல்படுகின்றனர். ஒவ்வொரு நிர்வாகியும் எப்படி உழைக்கிறார்கள் என்ற முழு விவரமும் என்னிடம் இருக்கிறது. தப்பு செய்தவர்கள் திருத்திக்கொள்ள ஒரு வாய்ப்பளிக்கிறேன். யார் பெயரையும் குறிப்பிட்டு புண்படுத்த விரும்பவில்லை. கட்சிக்கு விரோதமாக செயல்பட்டால் கடும் நடவடிக்கை எடுப்பேன்" என எச்சரித்தார் மு.க.ஸ்டாலின். நிகழ்ச்சியில் நிர்வாகிகளின் கருத்தைக் கேட்காததால் அதிருப்தியடைந்தனர்.

இது ஒருபுறமிருக்க, மேட்டூர், எடப்பாடி தொகுதிகளைச் சேர்ந்த அதிருப்தி கோஷ்டியினரோடு ஜூன் 12ம் தேதி மாலையில் பேசினார் சேலம் மண்டல பொறுப்பாளரும், அமைச்சருமான எ.வ.வேலு. சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரனும் உடனிருந்தார். மேட்டூர் மாஜி எம்.எல்.ஏ. கோபால், நங்கவள்ளி ரவிச்சந்திரன், அப்துல்சலாம், கொளத்தூர் தவசி ராஜா, கொடியரசி என்கிற கீதா, ரங்கசாமி, ஜலகண்டாபுரம் பேரூராட்சித் தலைவர் காசி, கொங்கணாபுரம் சுப்ரமணி, கருணாநிதி மற்றும் அருணாச்சலம், சரவணன், எடப்பாடி செந்தில் உள்ளிட்டோர் சந்தித்தனர்.

"யார் மீதும் நடவடிக்கை எடுப்பதற்காக



சேலம் நிர்வாகிகளுடன் மு.க.ஸ்டாலின்

# ஸ்டாலின் கடுகடு! எ.வ.வேலு சிடுசிடு! அப்செட்டில் சேலம் உடன்பிறப்புக்கள்!

நான் இங்கு வரவில்லை. எனக்கு சீட் கொடுத்தால்தான் தி.மு.க. ஜெயிக்கும் என்று நினைப்பவர்கள் தி.மு.க.வுக்கு புற்றுநோயைப் போன்றவர்கள். 2016, 2021 தேர்தல்களில் சேலம் மாவட்டத்தில் தி.மு.க. ஒரேயொரு இடத்தில்தான் வென்றது. கடந்த சட்டமன்றத் தேர்தலில் பெரிய வெற்றியைப் பெறவில்லை. மேட்டூர், எடப்பாடியில் ஜெயிக்காவிட்டால் ஆட்சியைப் பிடிக்காமல் போய்விடுவோமா? உங்கள் மா.செ. டி.எம்.செல்வ கணபதியிடம் பேச முடியாவிட்டால், அமைச்சர் ராஜேந்திரனிடம் கேளுங்கள்" என்று எ.வ.வேலு கறாராகப் பேசிவிட்டுச் சென்றார்.

அமைச்சர் எ.வ.வேலுவைச் சந்தித்த மூத்த நிர்வாகிகளிடம் பேசினோம். "சேலம் மேற்கு மா.செ. டி.எம்.செல்வகணபதி, வீரபாண்டியாரின் ஆதரவாளர்களை ஓரங்கட்டிவிட்டார். கடந்த தேர்தலில் மேட்டூரில் போட்டியிட்ட சீனிவாசபெருமாள், சங்ககிரி ராஜேஷ் ஆகியோரை கட்டம் கட்ட மேலிடத்திற்கு பரிந்துரைத்தார். அவர்களை டம்மியாக்குவதற்காக சங்ககிரி, மேச்சேரி ஆகிய ஒன்றியங்களை பிரித்து தனது ஆதரவாளர்களை ஒ.செ.க்களாக நியமித்துவிட்டார். கொங்கணாபுரம், எடப்பாடி, மகுடஞ்சாவடி ஒன்றியங்களிலும் இதே நிலைதான்.

நங்கவள்ளி ஒ.செ. அர்த்தநாரீஸ்வரன், மேட்டூர் ந.செ. காசி விஸ்வநாதன், மேச்சேரி ந.செ. சரவணன், வீரக்கல் பே.செ. முருகன் ஆகியோரை பொறுப்பிலிருந்து நீக்கும்படி பென் டீம் பரிந்துரைத்தது குறித்து அமைச்சர் எங்களிடம் பேசவேயில்லை. அ.தி.மு.க.விலிருந்து வந்தவர்களெல்லாம் உடனடியாக அமைச்சர், எம்.பி., எம்.எல்.ஏ., ஆகிவிடுகிறார்கள்.

கட்சிக்காக 40 ஆண்டுகளாக உழைத்த நிர்வாகிகளைப் பார்த்து புற்றுநோய் என்று குத்தலாகப் பேசுகிறார். சேலம் மாவட்டத்திற்கு பொறுப்பாளராக துணை முதல்வர் உதயநிதியை நியமிக்கவேண்டுமென்று முதல்வரிடம் விரைவில் முறையிடுவோம்" என்று குமுறினார்கள்.

கடந்த ஏப்ரல் 26-29 நாளிட்ட நக்கீரன் இதழில், 'அ.தி.மு.க. கோட்டையில் தி.மு.க. கொடி பறக்குமா?' என்ற தலைப்பில் வெளியிட்டிருந்த கட்டுரையை சுட்டிக்காட்டிய மூத்த நிர்வாகிகள், "வீரபாண்டியாரின் ஆதரவாளர்களைப் புறக்கணித்தால் சேலம் மாவட்டத்தில் வரும் தேர்தலிலும் தி.மு.க.வுக்கு பின்னடைவுதான் ஏற்படும்" என்றனர்.

இது தொடர்பாக விளக்கம்பெற அமைச்சர் எ.வ.வேலுவின் உதவியாளரை தொடர்பு கொண்டோம். "அமைச்சர், வள்ளுவர் கோட்டம்வரை சென்றிருக்கிறார். அவர் வந்தபிறகு அழைக்கிறோம்" என்றார்.

சேலம் மாவட்டத்தில் மா.செ.க்கள் மூவருக்கும் எதிராகப் புயலைக் கிளப்புகிறது அதிருப்தி கோஷ்டி.

**-இளையராஜா**



வயிற்றை நிரப்பினால் போதும் என்று வாழ்பவர்களுக்கு... வரப்போகும் ஆபத்து தெரியாது!



# கைதி எண் 9658

## புன்னப்புரா -வயலார்!

பொதுவாக கம்யூனிஸ்டுகளுக்கு நேர்ந்த சிறைக் கொடுமைகள் வெளியுலகத்திற்கு தெரியாமலேயே போய்விட்டது. அனைத்தையும் உயரமான மதில் சுவருக்குள் உள்ள பாதுகாப்பு அறைகளில், யாருக்கும் தெரியாதவாறு தடயங்களை அழித்துவிட்டார்கள். ஆனால் ஒரு நிகழ்வை மட்டும் இவர்களால் மறைக்க முடியவில்லை. முழுப் பூசணிக்காயை எப்படி சோற்றில் மறைக்க முடியாதோ, அப்படி ஜாலியன் வாலாபாக் படுகொலை பிரிட்டிஷ் அரசு, இந்தியாவில் செய்த மனிதப் படுகொலைகளிலேயே மிகவும் மோசமான படுகொலை. எத்தனையோ முயற்சி செய்தும் அதை அவர்களால் மறைக்க முடியவில்லை. அதைப் போலவே காங்கிரஸ் ஆட்சியாளர்கள், சேலம் சிறைச் சாலைக்குள் 22 கம்யூனிஸ்டுகள் கொல்லப்பட்ட உண்மையை மறைக்க முயன்று தோற்றுப்போயினர்.

அன்றைய தமிழகத்தின் சிறைகளில் சேலம் சிறை திட்டமிட்டு கட்டப்பட்ட சிறை. 1862ஆம் ஆண்டில் கட்டப்பட்டிருக்கிறது. 113 ஏக்கர் நிலம். தனித்தனி அறைகளின் எண்ணிக்கை 1400க்கும் மேல் இருந்தது. இந்த சிறைக்கு பல பெயர்கள் உண்டு. குரங்கு குல்லா ஜெயில், கறுப்பு குல்லா ஜெயில் என்று அழைக்கப்பட்டது. கம்யூனிஸ்டு தலைவர்கள் பலர் கொடிய தண்டனையை இங்கு சந்தித்துவந்தனர். 20 ஆண்டுகளுக்கு தண்டனை பெற்ற கம்யூனிஸ்டு கைதிகளும் இங்கு இருந்தனர். 'சிவப்பதிகாரம்' என்னும் பெயரில் ஒரு திரைப்படம் இருந்தாலும், முதலில் இந்த பெயரில் ஒரு புத்தகம் வந்திருந்தது. இந்த புத்தகத்தை எழுதியவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்ட செயலாளர் கே.வி.ராமசாமி. 1952ம் ஆண்டில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டவர். தமிழில் இவரிடம் அமைந்த மொழித்திறன், வேறு கம்யூனிஸ்டு தலைவர்களிடம் அமையவில்லை. இதற்கு சாட்சியம் சொல்லுவதற்கு இவர் எழுதிய சிவப்பதிகாரத்தை தவிர வேறு தேவையில்லை. சேலம் சிறையில் தோழர்கள் சிந்திய ரத்தம்,. இவரது சிவப்பதிகாரம் காவியமாகப் பிறப்பெடுத்ததை பலர் அறிந்திருக்கமாட்டார்கள். .

கம்யூனிஸ்ட் கட்சி மீதான தடையை நீக்க வேண்டும் எனச் சொல்லி நாடு முழுவதும் ஊர்வலங்கள் நடந்தன. இதை இதில் விவரிக்



www.nakkheeran.in

கிறார். கம்யூனிஸ்டு ஆதரவாளர்கள் மட்டுமல்லாது, ஜனநாயக சக்திகள் இந்த போராட்டங்களில் பங்கேற்க, இது எவ்வாறு மக்கள் போராட்டமாக மாறியது என்பதை விவரிக்கிறார். இதில் இவர் குறிப்பிட்டுச் சொல்வதில் ஒன்று முக்கியமானது. கம்யூனிஸ்டுகளை கிரிமினல் என்னும் சொல் எவ்வாறு ஆத்திரப்படுத்தியது என்பதுதான் அது. ‘அரசியல் கைதிகளாக நடத்தவேண்டும் என்ற சுயகௌரவம் அவர்களை எதையும் செய்யத் தூண்டியது’ என்கிறார். இதுவே உண்ணாவிரதத்திற்கான உத்வேகமாக அமைந்தது என்கிறார். இதில் மற்றொன்றையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

புரட்சிகர உணர்வுகள் எப்படியோ ஒன்றோடு மற்றொன்று தொடர்புகொண்டு விடுகின்றன. இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கும், புன்னப்புரா வயலார் போராட்டத்திற்கும் ஒரு தொடர்பு வந்துவிட்டது. நல்லகண்ணுவை போன்ற ஆயிரம் ஆயிரம் உறுதிகொண்ட கம்யூனிஸ்டு தோழர்களுக்கு புன்னப்புரா -வயலார் போராட்டம், ஒரு ஆதர்சம். தெலுங்கானாவைப் போலவே இதுவும் மக்கள் புரட்சியின் பல்வேறு கூறுகளை இளம் கம்யூனிஸ்டுகளுக்கு கற்பித்துக் கொண்டிருந்தது. சேலம் சிறையில் புன்னப்புரா -வயலார் போராட்டத்தில் பங்கேற்ற கம்யூனிஸ்டுகள் பலரும் இருந்தனர்.

தோழர் நல்ல கண்ணுவின் தியாகத்தை தெரிந்துகொள்ள விரும்பும் ஒவ்வொருவரும் புன்னப்புரா-வயலார் போராட்டம் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது என் விருப்பம். கொச்சி ராஜா, திருவிதாங்கூர் மகாராஜாவுக்கு சேர்தலா என்னும் பகுதியை தானமாகக் கொடுத்திருந்தார். திருவிதாங்கூர் மகாராஜாவிற்கு மூன்றில் இரண்டு பங்கு நிலம் சொந்தமாக இருந்தது. இங்கு அடிப்படையான குறைந்தபட்ச கூலி கிடையாது. வேலை நேரம் எது என்று யாருக்குமே தெரியாது. மற்றொரு கொடுமையும் நிலப்புரத்துவத்தின் கோர முகமாக இங்கு நிகழ்ந்துகொண்டேயிருந்தது. விவசாயக் கூலிகள் அடிமைகள். திருமணம் செய்து கொள்ளலாம், ஆனால் முதல் இரவை நிலப்பிரபுக்களுடன் கழிக்க வேண்டும் என்ற கட்டாயம் எழுதப்படாத சட்டமாக இருந்தது.

விவசாயத் தொழிலாளர்களிடமிருந்த அடிமைத்தனம் குத்தகை விவசாயிகளிடம் இல்லை. அவர்களுக்கு அன்று உருவாகியிருந்த சமூக சீர்திருத்த இயக்கங்கள் கொஞ்சம் விழிப்புணர்வை தந்திருந்தன. இதைத்தவிர தொழிற்சங்கங்கள், உழைக்கும் மக்களை அரசியல்படுத்துவதில் பெரும் வெற்றியைக் கண்டிருந்தன.

1938ஆம் ஆண்டில் கயிறு திரிக்கும் தொழிலாளர்களின் போராட்டமாகத்தான் முதலில் தொடங்கியது.

திருவிதாங்கூர் சமஸ்



–சி.மகேந்திரன்

விருப்பம் இருந்தால் ஆயிரம் வழிகள் -விருப்பம் இல்லாவிட்டால் ஆயிரம் காரணங்கள்: இவைதான் மனிதனின் எண்ணம்!


Vol.38
Issue No:19
நக்கீரன்

நக்கீரன் பப்ளிகேஷன்ஸுக்காக, நக்கீரன் பிரிண்டர்ஸ் & பைண்டர்ஸ், 105, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14ல் அச்சிட்டு வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்:
**நக்கீரன் கோபால்**
தொலைபேசி: 044-26881700, 26881800
மின்அஞ்சல் : nakkheeran2003@yahoo.com
nakkheeran2003@gmail.com
இணையம்: www.nakkheeran.in

**முதன்மை பொறுப்பாசிரியர்: மாவலி**
**முதன்மை துணை ஆசிரியர்கள்:**
ஆரூர் தமிழ்நாடன், இரா.த.சக்திவேல், ராம்கி
**முதன்மை சிறப்பு நிருபர்கள்:**
இரா.இளையசெல்வன்,
தாமோதரன் பிரகாஷ்
**துணை ஆசிரியர்கள் :**
க.சுப்பிரமணியன், சிவலிங்கம், கவுதமன்,
எம்.செந்தில்குமார், தா.மகாராஜன்
**ஸ்பெஷல் நியூஸ் Correspondent :** நாகேந்திரன்
**முதன்மை நிருபர்கள் :**
ஜீவா தங்கவேல், பி.சிவன், சுப்பு
**தலைமை நிருபர்கள்:** சக்திவேல், எஸ்.பி.எஸ்., ராஜா, பகத்சிங், செல்வகுமார், துரை.மகேஷ்,
**சீனியர் நிருபர்கள்:** அண்ணல், அரவிந்த்
**நிருபர்கள்:** அருண்பாண்டியன், மணிகண்டன், இளையராஜா

**முதன்மை வடிவமைப்பு :** குரு
**தலைமை வடிவமைப்பாளர்கள்:**
துரை.கணேசன், ஆர்.சி.மதிராஜ், த.சரவணப்பெருமாள்
**துணை வடிவமைப்பாளர்:**
ச.ராஜேந்திரன்
**தலைமை புகைப்படக் கலைஞர்கள்:**
எஸ்.பி.சுந்தர், ஸ்டாலின்
**துணைத் தலைமை புகைப்படக் கலைஞர்:**
ப.ராம்குமார்

**மேலாண்மை நிர்வாகி : ஆர்.குருசாமி**
**பொது மேலாளர் :** எஸ்.சுரேஷ்குமார்
**நிர்வாக மேலாளர் :** சி.பிரான்சிஸ்
**கணக்கு & சந்தா மேலாளர் :** சி.மோகன்
**சந்தா பிரிவு உதவியாளர்:** பார்த்திபன்
**முதன்மை காசாளர் :** பி.என்.ஆனந்த்
**தயாரிப்பு மேலாளர்கள் :**
பி.மோகன், ஆர்.கௌரிநாதன்
**விநியோக மேலாளர் :** கே.மலைக்கண்ணன்
**விநியோக உதவி மேலாளர் :** என்.சத்தியசீலன்
**விநியோகம் :** லாரன்ஸ், அரவிந்த்
**தயாரிப்பு ஒருங்கிணைப்பாளர் :** து.கண்ணன்
**தயாரிப்பு உதவி :** எச்.கண்ணன், பி.கணேசன், சந்திரோதயம், பி.வெங்கடேஷ்
**விளம்பர மேலாளர் :**
சி.சுரேஷ்குமார்
**பிரதிநிதி:** கே.சிவகுமார்
**கணக்கு ஒருங்கிணைப்பு :** ஷபீர்அகமது, வெங்கடேஷ்
**தலைமை கள மேலாளர் :** ஆர்.சீனிவாசன்
**கள மேலாளர்கள் :** கந்தசாமி, பரமசிவன், திருமலை
**பதிப்பக மேலாளர் :** தனுஷ்
**துணை பதிப்பக மேலாளர் :** கிறிஸ்டோபர்
**பதிப்பக உதவி :** ராமலிங்கம், யூனூஸ், பாண்டியன்

**Legal Manager : பாரிஸ்டர். ஆர்.வி.சாருமதி**
**Our Bankers : M/s. INDIAN BANK, Sterling Road Branch**


சிறப்புக்கட்டுரைகள் மற்றும் பேட்டிகளின் கருத்துக்கள் அதைத் தெரிவித்தவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத் தன்மைக்கு நக்கீரன் நிர்வாகம் பொறுப்பல்ல.


தானம் இரண்டு இடங்களில் தாக்குதலுக்கு திட்டமிட்டிருந்தது. ஒன்று புன்னப்புரா, மற்றொன்று வயலார். திருவிதாங்கூரின் அன்றைய திவான் சி.பி.ராமசாமி ஐயர். இவர் கேரள உழைக்கும் மக்களுக்கு அளவற்ற கொடுமையைச் செய்தவர். புன்னப்புராவில் ஒரு பொது வேலை நிறுத்தம். தடை உத்தரவு பிறப்பித்த கையோடு ராணுவம், நிலப்பிரபுக்களின் ரௌடிகள் -காவல்துறையினர் என்ற கூட்டணியை, உழைக்கும் மக்களுக்கு எதிராக உருவாக்கினார் திவான். புன்னப்புராவில் மட்டும் 200 பேருக்கும் மேல் கொல்லப்பட்டனர்.

வயலார் மூன்றுபுறமும் நீரால் சூழப்பட்ட நிலம். ராணுவம் நிலம் முழுவதும் சூழ்ந்து கொண்டது. கடல் எல்லை முழுவதும் திருவிதாங்கூரின் கப்பல்படை சுற்றி நின்றது. ராணுவம் உள்ளே புகுந்து மக்களை கொன்று குவித்தது. வயலாரில் 150 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமுற்றனர். புன்னப்புரா -வயலார் போராட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தகவல்கள் கூறுகின்றன.

அந்த புன்னப்புரா -வயலார் போராட்டத்தில் பங்கேற்ற பலர், கம்யூனிஸ்டு கட்சி தடை செய்யப்பட்டபோது சேலம் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தார்கள். இந்த நிலையில், சேலம் சிறையில் 1950 பிப்ரவரி 7ஆம் தேதி உண்ணாநோன்பு போராட்டத்தை தொடங்கினார்கள். இந்த சிறைச்சாலைகளில் மலையாளிகள் அதிகம் என்பதால் ஒரு மலையாளியையே அதிகாரியாக நியமித்திருந்தார்கள். அவர் பெயர் கிருஷ்ணன் நாயர். மனித மிருகம் என்று எல்லா சிறைச்சாலைகளிலும் எல்லாக் கைதிகளிடமும் பெயர் எடுத்திருந்தார் இவர் கடும் மிரட்டல்களைச் செய்து பார்த்தார்.

1950ஆம் ஆண்டு பிப்ரவரி 11ஆம் தேதி. கிருஷ்ணன் நாயரின் தலைமையில் சிறைக் காவலர்கள், சிறைக் கொட்டடியில் அணிவகுத்தனர். தடியடி நடக்கும் என எதிர்பார்த்த தோழர்கள் தற்காப்புக்கு திருப்பித் தாக்குவது என்ற முடிவுக்கு வந்தார்கள். போர்க்களமாய் சேலம் சிறை மாறியது. சிறைக்காவலர்கள் துப்பாக்கியோடு உள்ளே நுழைந்தனர். 105 ரவுண்டு துப்பாக்கி வேட்டுச் சத்தம். சிறைக்கூடமே ரத்தச் சேறானது. 17 தோழர்கள் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியானார்கள், 5 தோழர்கள் தடியால் அடித்தே கொலை செய்யப்பட்டிருந்தனர். 119 தோழர்கள் படுகாயமுற்றார்கள். 63 தோழர்களின் உடலில் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்திருந்தன.

காவேரி முதலியார், சேலம் அரியாகவுண்டம்பட்டி ஆறுமுகம், விழுப்புரம் ஷேக்தாவூது ஆகிய மூவரும் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள், மற்றவர்கள். கேரளத்தைச் சார்ந்தவர்கள். புன்னப்புராவிலும், வயலாரிலும் சிந்திய ரத்தம் தவிர, சேலம் சிறையில் ரத்தம் சிந்திய அந்த கேரளத்து தோழர்களை நினைத்துப் பார்க்கிறேன். 'புரட்சி ஓங்குக' என்ற சொல்லின் அர்த்தம் எனக்குப் புரிகிறது. தமிழக தியாகிகள் மூவருக்கும் என் வீரவணக்கம்!

**(தொடரும்)**



ஜிங்கா கோல்டு™
GMP
GOOD MANUFACTURING PRACTICE
CONSISTENT QUALITY
CERTIFIED ISO 9001:2008 COMPANY
Jinga Gold™
IT ONLY TAKES ONE
4 CAPSULES
4 கேப்சூல்ஸ்
ரூ.600/-
மட்டுமே
ஒன்னு போதும்
நின்னு பேசும் !
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில்
Apollo PHARMACY
MedPlus
அப்பலோ, மெட்ப்ளஸ்
உட்பட அனைத்து மருந்து
கடைகளிலும் கிடைக்கும்
SUPER STOCKIST
SRUTI'S
மாவட்ட வாரியான உதவிக்கு
90036 40742
ஹெல்ப் லைன்
9962 66 4444
For Personal Delivery
9962 808090


Advt

# டூரிங் டாக்கீஸ்



## மகிழ்ச்சியும் சோகமும்!

திருமணத்திற்குப் பிறகு, தான் நடித்த படங்கள் சரியான வேளையில் வெளியாவதில்லை என்ற கவலையிலிருந்தார் கீர்த்தி சுரேஷ். அவர் லீட் ரோலில் நடிப்பதாக அறிவிக்கப்பட்ட 'ரிவால்வர் ரீட்டா', 'கண்ணிவெடி' ஆகிய படங்கள் நீண்டகால தயாரிப்பில் இருந்தது. சமீபத்தில் 'ரிவால்வர் ரீட்டா' ஆகஸ்டு 27ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாவதாக அறிவிக்கப்பட்டது. இதனால் கீர்த்தி சுரேஷ் கூடுதல் மகிழ்ச்சியில் இருக்கிறார். காரணம் அவர் நடிப்பில் இன்னொரு படமான 'உப்பு கப்புரம்பு' படமும் அடுத்த மாதம் 4ஆம் தேதி ரிலீஸாவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தெலுங்கு படமான 'உப்பு கப்புரம்பு' நேரடியாக ஓ.டி.டி.யில் வெளியாகிறது. தமிழிலும் இப்படம் வெளியாகிறது.



கீர்த்தி சுரேஷ்

www.nakkheeran.in

## ஃபிட்னஸ் ஆர்டர்!

க்டர் டு ஹீரோ என்ற லிஸ்ட்டில் புதுவரவாக இணையவுள்ளார் லோகேஷ் ஜ. அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் கமிட்டாகியுள்ள அவர், அதற்கான ளில் இதுவரை ஈடுபடாமல் இருந்தார். இதற்கு ரஜினியை வைத்து அவர் கும் 'கூலி' படம் காரணமாக அமைய, இருப்பினும் நேரம் கிடைக்கும் தெல்லாம் தனது கதாபாத்திரம் குறித்து கேட்டறிந்து வந்துள்ளார். இந்த ழலில் கூலி படம் போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் முடியும் தருவாயில் இருக்க அருண் மாதேஸ்வரனை அணுகிய லோகேஷ், வழக்கம் போல் கதாபாத்திரம் குறித்து கேட்க, அவருக்கு ஒரு ஆர்டர் போட்டுள்ளார் அருண் மாதேஸ்வரன். படம் முழுக்க ஆக்ஷன் பின்னணியில் உருவாவதால் தற்காப்பு கலை கற்க சொல்லியும் உடலை ஃபிட்டாக வைத்திருக்க சொல்லியும் உத்தரவிட்டுள்ளாராம். இதனால் தற்போது தற்காப்பு கலை கற்று வருகிறார் லோகேஷ் கனகராஜ். மேலும் ஃபிட்டாக இருக்க அவர் உடற்பயிற்சியும் தீவிர டயட்டிலும் இருந்து வருவதாக கோலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


நிமிஷா சஜயன்



## சப்போர்ட் பண்ணுங்க!

'சித்தா', 'ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்' படங்கள் மூலம் தமிழிலும் தனது நடிப்பு கரியரை விரிவாக்கி வரும் மலையாள நடிகையான நிமிஷா சஜயன், தற்போது மீண்டும் ஒரு தமிழ் படத்தில் நடித்துள்ளார். அதர்வா நடிப்பில் 'டிஎன்ஏ' படத்தில் நாயகியாக நடித்துள்ளார். இப்படத்தை 'ஒரு நாள் கூத்து', 'ஃபர்ஹானா' படங்களை இயக்கிய நெல்சன் வெங்கடேசன் இயக்கியுள்ளார். படத்தின் பணிகள் 2023ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, நீண்ட இடைவெளிக்குப் பிறகு படம் திரைக்கு வருகிறது. இது குறித்து பேசிய நிமிஷா சஜயன், 'இந்தப் படம் ஸ்பெஷலான படம் என்றும் தான் நடித்த திவ்யா கதாபாத்திரம் கொஞ்சம் சவால் நிறைந்ததாக இருந்தது' என்றும் கூறினார். மேலும், 'இதுவரை தன்னுடைய தமிழ் படங்களுக்கு சப்போர்ட் செய்த அனைவரும் இந்த படத்துக்கும் சப்போர்ட் செய்ய வேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டார்.

## ராஜன் வகையறா!

வெற்றிமாறன் -சிம்பு இணையும் படம் கேங்ஸ்டர் ஜானரில் உருவாகும் நிலையில், படத்தின் கதை பற்றி ஒரு சுவாரஸ்ய தகவல் வெளியாகியுள்ளது. படத்தின் கதை 'வடசென்னை' பட கதையுடன் தொடர்புபடுத்தி எழுதப் பட்டுள்ளதாம். 'வட சென்னை'யில் நடித்த ஆண்ட்ரியா, சமுத்திரக்கனி, கிஷோர் உள்ளிட்ட பலரும் இதிலும் நடிக்கிறார்களாம். படப்பிடிப்பு அடுத்தமாதம் தொடங்கவுள்ள நிலையில் இந்த மாத இறுதியில் அதுபற்றிய அறிவிப்பு வெளியாகவுள்ளது. இதற்கான புரொமோ ஷூட் சில தினங்களுக்கு முன்பு தொடங்கப்பட்டு, சர்ப்ரைஸாக இயக்குநர் நெல்சன் இப்படத்தில் நடிக்கிறார். கூடவே கவினும் நடிப்பதாக ஒரு தகவல் இருக்கிறது. படத்திற்காக சிம்புவும் தனது கெட்டப்பை மாற்றியுள்ளார். படத்திற்குப் பெயர் 'ராஜன் வகையறா'. 'வடசென்னை' படத்தில் வரும் ராஜன் கதாபாத்திரத்தை மையமாக வைத்து ஒரு முழுநீள படம் அளவிற்கு ஏற்கனவே வெற்றிமாறன் படமாக்கி வைத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

-கவிதாசன் ஜெ.



சத்திரப்பட்டி காவல்நிலையம்

# போலீஸ் நிலை... லாக்கப்பில் ஏ...

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே வி.சத்திரப்பட்டி காவல் நிலையத்தை பிராபகரன் தலைமையிலான ரவுடிகள், தெலுங்குப் பட பாணியில் சூறையாடிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், போலீசார் விசாரணை என்ற பெயரில் கிராம மக்களைத் துன்புறுத்துவதாக திருமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.பி.உதயகுமாரிடம் அந்தப் பகுதியை சேர்ந்த மக்கள் புகாரளித்திருந்தனர். இதையடுத்து காவல் நிலையத்தைப் பார்வையிடச் சென்ற அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமாரை டி.எஸ்.பி. சந்திரசேகரன் தடுத்துநிறுத்தினார். அதற்கு உதயகுமார், “போலீஸ் ஸ்டேசனையே தெலுங்குப் பட பாணியில் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இதுவரை இப்படி ஒரு சம்பவம் நடந்ததில்லை. நீங்கள் ரவுடிக்கு ஆதரவாகச் செயல்படுகிறீர்கள். அவன் ஏற்கனவே ஆணவக் கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டவன். பல கொலைவழக்கு இருக்கு என்கிறீர்கள். காவல் நிலையத்திலிருந்த ஏட்டு பால்பாண்டியை அறையில் வைத்துப் பூட்டியிருக்கான். இந்த தொகுதி எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர், தற்போது சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத்தலைவர் என்னை காவல் நிலையத்தைப் பார்வையிட விடமாட்டீர்கள் என்றால் என்ன அர்த்தம்? இந்த விசயத்தை மூடிமறைக்க காவல்துறையே ரவுடிக்கு உடந்தையாக இருப்பது என்ன நியாயம்?” என்று கேள்வியெழுப்பினார்.

உள்ளே செல்ல முயன்ற உதயகுமாரை கைது செய்த அடுத்த சிலமணி நேரத்தில், அ.தி.மு.க. தலைவர் எடப்பாடி, “மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை. மக்களைக் காக்கவேண்டிய காவல்துறைக்கும் பாதுகாப்பில்லை. தற்போது காவல் நிலையத்திற்கே பாதுகாப்பில்லை. நான்காண்டு ஆட்சிக் காலத்தில் சாதனைப் பட்டியலில் முதலில் சேர்க்கவேண்டிய சாதனை இதுதான்'' என்று அறிக்கைவிட, தென்மண்டல ஐ.ஜி. பிரேம்ஆனந்த் சின்கா, மாவட்ட கண்காணிப்பாளர் அரவிந்தன் ஆகியோர் சம்பவம் நடந்த காவல் நிலையத்திற்கு வந்தனர்.

நாம் எஸ்.பி. அரவிந்தனிடம், “ஏற்கனவே சம்பந்தப்பட்ட ரவுடிமீது பல்வேறு வழக்குகள் இருக்கிறதா சொல்கிறீர்கள். ஏன் இன்னும் அவர் கைது செய்யப்படவில்லை'' என்றதும் “இச்சம்பவம் தொடர்பாக டி.எஸ்.பி. சந்திரசேகரன் தலைமையில் தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளது. விரைவில் கைதுசெய்யப்படுவார்கள். மற்றபடி இதை


ரவுடி பிரபாகரன்

www.nakkheeran.in




# லயம் சூறை! ட்டு! –ஆட்டம்போட்ட ரவுடி!

பத்திரிகைகள் பெரிதாக்க வேண்டாம்” என்றார்.

இந்த தாக்குதல் குறித்து சத்திரபட்டியைச் சேர்ந்த ஒருவர் நம்மிடம் பேசியபோது,

“சம்பவம் நடந்த கடந்த 13-ஆம் தேதி இரவு பால்பாண்டி என்ற ஒரு காவலர் மட்டுமே போலீஸ் ஸ்டேஷனில் இருந்தார். ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருக்கிறது ஸ்டேஷன். பல்வேறு கொலை அடிதடி வழக்குகளில் உள்ள பிரபாகரனின் வீட்டிற்கு, காலையில் போலீஸார் வந்து சோதனை நடத்திய பிறகு, விசாரிக்கவேண்டும் என்று அவனின் அப்பாவைக் கூட்டிச்சென்றனர். இதை கேள்விப்பட்டு இரவு வீட்டிற்கு வந்த பிரபாகரன், நேராக காவல் நிலையத்திற்கு தன் கூட்டாளிகளுடன் வந்து, தான் வீட்டில் இல்லாதபோது காவல்துறையினர் அத்துமீறி உள்ளே நுழைந்து, தனது தந்தையை மிரட்டியிருப்பதாகக் கூறியிருக்கிறார்.



எஸ்.பி. அரவிந்தன்

மதுபோதையிலிருந்த அவர், தமது கூட்டாளியுடன் சேர்ந்து காவல் நிலையத்தில் பணியிலிருந்த காவலர் பால்பாண்டியை மிரட்டியுள்ளார். அங்கிருந்த பொருட்களையும் அடித்து உடைத்துள்ளார். பின்பு காவல் நிலையத்திலிருந்த காவலர் பால்பாண்டியை அறைக்குள் தள்ளி பூட்டியுள்ளார்.

இது நடந்தது இரவு 12.30 மணி. அதிகாலை 4.30 வரை அறைக்குள்ளேயே இருந்துள்ளார் பால்பாண்டி. சத்தம் போட்டும் யாருக்கும் கேட்கவில்லை. இந்நிலையில் அந்தவழியாக சென்ற பால்காரர் அவரைக் காப்பாற்றியுள்ளார். அதன்பின்தான் ஊர்மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து தொகுதி எம்.எல்.ஏ.விடம் ரவுடி பிரபாகரன் குறித்து புகாரளித்தனர். ஏற்கெனவே சாதி மாறி காதலித்தார்கள் என்று காதலித்த இளைஞரை கழுத்தை அறுத்து ஆணவக்கொலை செய்த வழக்கில் அவரை கைதுசெய்தனர். அதில் ஜாமீனில் வெளியேவந்தார். அடுத்தடுத்து பல்வேறு அடிதடி கொலைவழக்குகளில் பெயர் அடிபட்டும் போலீஸார் கண்டு கொள்ளாமல் இருந்தனர். இப்போது காவல் நிலையத்தையே அடித்துநொறுக்கி போலீஸாரையே உள்ளே வைத்துப் பூட்டுமளவுக்கு தைரியம் வந்துள்ளது’’ என்று சொன்னார்.

ஆதித்தமிழர் கட்சித் தலைவர் ஜக்கையன், “சாதி மாறி காதலித்ததால் இளைஞர் அழகேந்திரனை ஆணவக்கொலை செய்தவன் இந்த பிரபாகரன். பல்வேறு கட்டப்பஞ்சாயத்து அடிதடியில் தொடர்புடையவன். ஆணவக்கொலை வழக்கில் முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்ட இந்த பிரபாகரன் மீது குற்றப் பத்திரிகையே போலீஸார் இன்னும் தாக்கல்செய்யவில்லை. இது குறித்து பலமுறை மாவட்ட எஸ்.பி. அரவிந்தனிடம் முறையிட்டும் அவர் கண்டுகொள்வதே இல்லை. அவனை போலீஸாரே கண்டும் காணாமல் விட்டதால்தான் இப்ப போலீஸ் நிலையத்தையே அடித்து நொறுக்குமளவுக்கு தைரியம் வந்திருக்கிறது. காவல்துறை அதிகாரிகளே தி.மு.க. ஆட்சியை தவறான வழியில் கொண்டு செல்கிறார்கள்” என்றார்.

இந்நிலையில் 15-ஆம் தேதி மாவட்ட எஸ்.பி. அலுவலகத்திலிருந்து பிரபாகரன், அவனது கூட்டாளி அய்யனார் இருவரும் கைசெய்யப்பட்டுள்ளதாக அனைத்து ஊடகங்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரசுரிக்க, குற்றவாளி பிரபாகரனின் புகைப்படம் நாம் கேட்டபோதோ கொடுக்க மறுத்துவிட்டனர்.

–அண்ணல்

www.nakkheeran.in






வத்தலகுண்டு
மின்வாரிய
அலுவலகம்

# ஆபாச மெயில்! வேதனையில் பெண் ஊழியர்கள்!

## –குற்றவாளிக்கு துணைபோகும் அதிகாரி!



பாஸ்கரன்

**தி**ண்டுக்கல் மாவட்டத்திலுள்ள வத்தலக்குண்டில் மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகம் செயல்பட்டுவருகிறது. இந்த அலுவலகத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆண், பெண் பணியாளர்கள் பணிபுரிகிறார்கள்.

ஆனால் இந்த அலுவலகக் கட்டடம் எந்தவொரு அடிப்படை வசதியும் இல்லாமல் பழமையாக இடியும் தறுவாயில் இருக்கிறது. கழிவறை வசதிகூட கிடையாது. இங்குதான் சக பெண் ஊழியர்களை ஆபாசமாக சித்தரித்து மெயில் அனுப்பிய விவகாரம் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 25 நாட்களுக்கு முன்பு இந்த அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை பொறியாளர் ஒருவர், அலுவலக மெயில் ஐ.டி.யிலிருந்து, வத்தலக்குண்டு கோட்டத்திலுள்ள அனைத்து மின் உதவிப் பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்களுக்கும் மெசேஜ் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. அந்த மெயிலில், ‘இரவு நேர இன்பத்திற்கு அழைக்கவும். விடிய விடிய ரூ.100’ என எழுதப்பட்டு, அங்கு பணிபுரியும் பெண் ஊழியர் ஒருவரின் பெயர் மற்றும் செல் நம்பரை பதிவிட்டு, அதற்கு கீழே ‘அப்பப்போ... இலவசம்’ என மற்றொரு பெண் ஊழியர் பெயர் மற்றும் செல்போன் நம்பரை பதிவிட்டு அனைவருக்கும் அனுப்பப்பட்டிருந்தது.

அதைப் பார்த்துவிட்டு கதறி அழுதவாறே பாதிக்கப்பட்ட இரண்டு பெண் ஊழியர்களும் இதுதொடர்பாக உயரதிகாரிகளிடமும், திண்டுக்கல்லிலுள்ள எஸ்.பி. அலுவலகத்திலுள்ள சைபர் க்ரைம் போலீசிலும் உடனடியாக புகார் கொடுத்தனர். வழக்குப்பதிவு செய்தும்கூட, அதே அலுவலகத்தில் பணியாற்றிவரும் ஊழி

## இதயம் எந்த அளவுக்கு பிடித்தவர்களிடம் சண்டை போடுகிறதோ, அந்த அளவுக்கு அவர்களிடம் அன்பை எதிர்பார்க்கும்!

யரை கைது செய்யவில்லையாம். அந்த நபர், உயரதிகாரிக்கு ஆதரவாக இருந்துகொண்டு அவரையும் வளர்த்து வருவதால் அவர்மீது நடவடிக்கை எடுக்காமல் பாதுகாப்பதாகக் கூறப்படுகிறது. அதனால் அந்த வக்ரபுத்தி நபர் தங்கள் கண்முன் நடமாடுவது பொறுக்காமல் அந்த பெண் ஊழியர்கள் வேதனையோடு பணியாற்றுகிறார்கள்.

"கடந்த 14ஆம் தேதி மதியம் சுமார் 12:19 மணிக்கு நாங்கள் இருவரும் அலுவலக அறையிலிருந்து வெளியே சென்றிருந்த வேளையில், எங்களை இழிவுபடுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்தி, இளநிலை பொறியாளராகப் பணியாற்றும் பாஸ்கரன் என்பவர் அலுவலக ஐ.டி. யிலிருந்து வத்தலக்குண்டு மண்டலத்திலுள்ள அனைவருக்கும் ஆபாசமாக இ-மெயில் அனுப்பியுள்ளார்.


கருப்பையா

இதுகுறித்து அலுவலக ரீதியாகவும், காவல்துறையிலும் புகாரளித்தும், இந்த பாஸ்கரன், செயற்பொறியாளர் கருப்பையாவின் உறவினர் என்பதால் அவர்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இச்சம்பவத்தால் வெளியே தலைகாட்ட முடியாமல் வேதனையிலிருக்கிறோம். எங்களுக்கு உரிய நியாயம் வழங்க வேண்டும். அதோடு, அவர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதால் முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கும், எங்கள் துறை அமைச்சர் மற்றும் மின்வாரிய உயரதிகாரிகளுக்கும் புகார் அனுப்பியுள்ளோம்'' என்றனர் பாதிக்கப்பட்ட பெண் ஊழியர்கள்.

இந்த குற்றச்சாட்டை பற்றி இளநிலை பொறியாளர் பாஸ்கரனிடம் செல்பேசி மூலம் கேட்டபோது,

''நான் அய்யம்பாளையம் துணைமின் நிலையத்தில் வேலை பார்த்து வருகிறேன். ஏதாவது வேலை என்றால்தான் இந்த ஆபீசுக்கு வந்து போவேன். சம்பவத்தன்று நான் வந்தேன். ஆனால் 12 மணிக்கு அந்த சீட்டிலிருந்து நான் வெளியே போய் விட்டேன். எனக்கு ஒன்றும் தெரியாது" என்று கூறினார்.

செயற்பொறியாளர் கருப்பையாவிடம் இதுகுறித்து கேட்டபோது, "எங்கள் துறை ரீதியாகவும் சைபர்கிரைம் போலீசில் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது'' என்றவரிடம், ''பாஸ்கரன் உங்கள் உறவினர் என்பதால்தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அந்த பெண் ஊழியர்கள் குற்றம் சாட்டுகிறார்களே?'' என்றதற்கு... "ஆதாரம் இல்லாமல் யார் மேலயும் நடவடிக்கை எடுக்க முடியாது" என்றார்.

இதுசம்பந்தமாக திண்டுக்கல் மாவட்ட மேற்பார்வை பொறியாளர் பிரபாகரனிடம் கேட்டபோது, ''அது தொடர்பாக நிர்வாக ரீதியான விசாரணையும் நடைபெற்றுவருகிறது. அதோடு போலீசிலும் புகார் கொடுக்கப்பட்டிருப்பதால் கூடிய விரைவில் குற்றவாளி யார் என்ற உண்மை வெளியே வரும். அதன்மூலம் சட்ட ரீதியாகவும், துறை ரீதியாகவும் நடவடிக்கை இருக்கும்'' என்று கூறினார்.

இரண்டு அரசு பெண் ஊழியர்களை ஆபாசமாக பாலியல் உறவுக்கு அழைப்பது போல் சித்தரித்து இ-மெயில் மூலம் பரப்பிய சம்பவம் நடந்து பல நாட்களுக்கு மேலாகியும் கூட இன்னும் சைபர் க்ரைம் போலீஸ் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அரசுத் துறையில் பணிபுரியும் பெண்களுக்கு இப்படி ஒரு அதிர்ச்சியான சம்பவம் நடந்தும் இதுவரை துறைரீதியாகவும் நடவடிக்கை இல்லை. இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் மின் வாரிய ஊழியர்கள் போராட்டத்தில் குதிக்கத் தயாராகி வருகிறார்கள் என்று கூறப்படுகிறது. இந்நிலையில், பெண் ஊழியர்களின் புகாரின் அடிப்படையில் தற்போதுதான் போலீசார் முதல் தகவல் அறிக்கையே பதிவு செய்திருப்பதாகக் கூறுகிறார்கள்.

**-சக்தி**

**கல்வராயன் மலையில் உற்பத்தியாகி, சேலம், பெரம்பலூர், கடலூர், அரியலூர் ஆகிய மாவட்டங்களை கடந்து பரங்கிப்பேட்டை அருகே கடலில் கலக்கிறது வெள்ளாறு. இந்த நீண்ட ஆற்றில் பூமியை தோண்டித் தோண்டி மணலை எடுத்துக் கடத்துவது பெரும் பிரச்சனையாகிவருகிறது.**

முன்பு, மணல் குவாரிகளில் அளவுக்கதிகமாக மணலை சுரண்டியதால் நீதிமன்றத்தில் வழக்காகி, அமலாக்கத்துறை ரெய்டுகளால் குவாரிகளை அரசு மூடியது. மணல் குவாரிகள் மூடப்பட்டதால் வேறு வழிகளில் இறங்குகிறார்கள் மணல் திருடர்கள்.

புவனகிரியிலிருந்து வெள்ளாற்றின் இரு கரைகளிலும் உள்ள சின்ன குப்பம், பெரிய குப்பம், வீரமுடையான் நத்தம், பெரிய நற்குணம், பு.ஆதனூர், அகரம் உட்பட 50க்கும் மேற்பட்ட ஆற்றின் கரையோர கிராமங்களில் வெள்ள நீர் கரையை உடைத்துக்கொண்டு ஊருக்குள் புகுந்து சேதத்தை ஏற்படுத்துகிறது.

இந்த கிராமங்களை காப்பாற்ற சுமார் 45 ஆண்டுகளுக்கு முன்பு பொதுப்பணித்துறை சார்பில் சேத்தியாதோப்பு, புவனகிரி வரை பல இடங்களில் தடுப்புச் சுவர்கள் கட்டப்பட்டன. தற்போது அந்தந்த பகுதிகளிலுள்ள பலர் தங்கள் நிலங்களுக்குச் செல்லவேண்டி தடுப்புச் சுவர்களை சேதப்படுத்தி வழித்தடம் அமைத்துள்ளனர். மேலும் பல இடங்களில் சுவர்கள் உடைக்கப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக 2005ஆம் ஆண்டு, சுற்றுவட்டார கிராமங்கள் கடுமையான வெள்ளத்தில் சிக்கின. எனவே தடுப்புச்சுவர்களைப் பாதுகாக்கவேண்டி விவசாயிகள் அதிகாரிகளுக்கு பலமுறை புகாரளித்தபோதும் கண்டுகொள்ளவில்லையென்று விவசாயிகள் வேதனைப் படுகிறார்கள்.

இந்நிலையில், சௌந்தர சோழபுரம், செம்பேறி ஆகிய கிராமங்களை ஒட்டிச்செல்லும் வெள்ளாற்றில் மணல் சுரண்டல் காரணமாக வெள்ளத்தின்போது கரை உடைந்து பெரும் பாதிப்புக்கான சூழல் ஏற்பட்டது. இந்த கிராமங்களை பாதுகாக்கும் பொருட்டு தமிழக அரசு பொதுப்பணித்துறை மூலம் மூன்று இடங்களில் வெள்ள நீர்த் தடுப்புச் சுவர் கட்டும் பணியை மேற்கொண்டு வருகிறது. இதற்காக அரசு 17 கோடியே 98 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, கடந்த ஜனவரி முதல் கட்டுமானப் பணிகள் நடக்கின்றன. இந்த பணியை குறிஞ்சிப்பாடியை சேர்ந்த ஐஸ்வர்யா கன்ஸ்ட்ரக்ஷன் என்ற கம்பெனி செய்து வருகிறது. இந்த வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுவதை வரவேற்கிறோம், ஆனால் ஏற்கனவே இப்பகுதியில் வெள்ளாற்று மணலை சுரண்டியதால் தான்



# மணல் ெ
# குமுறும்



தடுப்புச்சுவர் கட்டுமானப்பணி



சிமெண்ட் கலவை நடைபெறும் யூனிட்



www.nakkheeran.in

தனவேல்



ஆறுமுகம்



**இரு முகமாய் வாழாதீர்கள்; ஒரு முகமாய் வாழுங்கள் –முகம் முக்கியம்!**

கரைச்சரிவு ஏற்பட்டது. இந்நிலையில், வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுபவர்களும் ஆற்று மணலைத்தான் சுவர் கட்டும் பணிக்கு பயன்படுத்துகிறார்கள். இந்தக் கட்டுமானப் பணியை வைத்து, பல்வேறு இடங்களுக்கு மணலைக் கடத்துகிறார்கள் என்று குற்றச்சாட்டு வைத்ததோடு, மணல், சிமெண்ட் கலவை கலந்து லாரியில் வெளியூர்களுக்கு ஏற்றிச்செல்லும்போது கிராம மக்கள் தடுத்து நிறுத்தி போராட்டம் செய்துள்ளனர். தகவலறிந்து போராட்டக்களத்துக்கு வந்த பெண்ணாடம் காவல்துறையினர், கிராம மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி சமரசம் செய்துள்ளனர்.

ஒப்பந்தக்காரர் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுவதை காரணமாகக் கூறி மணல் கடத்துகிறார். அதுமட்டுமின்றி, வெள்ளாற்றில் ஒதுக்குப்புறத்தில் இருக்கும் மணலையும் இரவு நேரங்களில் டிராக்டர், டிப்பர், மாட்டுவண்டிகள் மூலமாகக் கடத்துகிறார்கள். இங்கிருந்து பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களுக்கு கட்சி வேறுபாடில்லாமல் பலரும் மணலை கடத்துகிறார்கள். இதையெல்லாம் பொதுப்பணித்துறை, கனிமவளத்துறை, காவல்துறையினர் கண்டும் காணாமல் இருப்பதாக கிராம மக்கள் குற்றம்சாட்டுகிறார்கள்.

இதுகுறித்து ஊழல் எதிர்ப்பு இயக்கத்தை சேர்ந்த செம்பேறி ஆறுமுகம் நம்மிடம், "எங்கள் கிராமத்தின் அருகே வெள்ளாற்றில் தடுப்புச்சுவர் கட்டும் பணி ஐந்து மாதங்களாக நடந்து வருகிறது. இந்த பணிக்கு மட்டும் ஆற்று மணலை பயன்படுத்திக்கொள்ள பொதுப்பணித்துறை அனுமதி வழங்கியுள்ளது. ஆனால் அந்த ஒப்பந்தக்காரர், இதேபோன்று பல இடங்களில் அரசு ஒப்பந்தங்களைப் பெற்று கட்டுமானப் பணிகளை செய்து வருகிறார். அதற்கெல்லாம் இங்கிருந்தே யூனிட் அமைத்து ஆற்று மணல், ஜல்லி, சிமெண்ட் கலவையை பத்துக்கும் மேற்பட்ட மிக்ஸர் மெஷின் லாரி மூலமாக இரவு பகலாகக் கடத்துகிறார். இதை கையுங்களவுமாக சில நாட்களுக்கு முன்பு பிடித்தோம். பெண்ணாடம் காவல்துறைக்கும் தகவல் தெரிவித்தோம். அவர்கள் ஒப்பந்ததாரரின் லாரியை மீட்டு அவர்களிடம் ஒப்படைத்ததோடு வழக்கும் பதியவில்லை. மணல் கடத்தல் காரர்கள், கனிமவளத்துறை உட்பட அனைத்துத்துறை அதிகாரிகளையும் கவனித்துக்கொள்வதால் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. இதுகுறித்து விருத்தாசலத்திலுள்ள வெள்ளாறு வடிநிலை கோட்ட செயற்பொறியாளருக்கு புகார் அனுப்பினோம். அவர் அளித்த பதிலில், 'ஆற்று மணலை வேறு இடங்களுக்கு கொண்டு செல்லக்கூடாது என்று ஒப்பந்ததாரருக்கு உத்தரவிடப் பட்டுள்ளது. மணல் திருட்டைத் தடுக்கக் கண்காணித்து நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது' என்று பதில் தெரிவித்துள்ளார். ஆனால் எந்த அதிகாரியும் மணல்

# காள்ளை! மக்கள்!



போலீசிடம் கிராம மக்கள் முறையீடு

திருட்டைத் தடுக்கவில்லை" என்கிறார்.

வெள்ளாறு பாதுகாப்பு சங்கத் தலைவர் தனவேல் நம்மிடம், "அ.தி.மு.க. ஆட்சியின்போது வெள்ளாற்றில் அளவுக்கு அதிகமாக மணல் அள்ளப்படுவதை தடுத்து நிறுத்த மிகப்பெரிய போராட்டத்தை தி.மு.க.வினர் நடத்தினார்கள். பல வழக்குகளையும் சந்தித்தார்கள். ஆனால் இவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகும் அதே நிலை தொடர்வது தான் வேதனை. மேலும், வெள்ளத் தடுப்புச்

கண்டன போஸ்டர்




சுவர் கட்டும் இடத்தை ஒட்டியே ஒப்பந்த தாரர் மணலை தோண்டுவதால் வெள்ளம் வரும் போது அந்த தடுப்புச் சுவர் சரிந்து விழும் அபாய முள்ளது. இப்படி எதைப் பற்றியும் கவலைப் படாமல் வேலை நடைபெறுகிறது" என்கிறார்.

வெள்ளத் தடுப்புச்சுவர் கட்டும் பகுதிக்கு நாம் நேரடியாகச் சென்று பார்வையிட்டோம். அப்போது பணித்தளக் கண்காணிப்பாளராக வேலை செய்துவரும் பெரியசாமி என்ற இளைஞர் நம்மிடம், "இந்தப் பகுதியில் மூன்று இடங்களில் வெள்ளத்தடுப்புச் சுவர் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இங்கு நடைபெறும் வேலைக்கு மட்டுமே இந்த ஆற்று மணலை பயன்படுத்துகிறோம். இதேபோல் வேறு கட்டுமானப் பணிகளை வேறு வேறு இடங்களில் எங்கள் ஒப்பந்ததாரர் செய்து வருகிறார். அந்தப் பணித்தளத்தில் தனித்தனியாக தளம் அமைத்து கலவைபோட்டு பணி செய்ய அதிக அளவில் செலவு ஆகும் என்பதால் இந்த இடத்தில் தளம் அமைத்து சிமெண்ட், மணல், ஜல்லி ஆகியவற்றை கலவை செய்து மிக்ஸர் மெஷின் லாரிகளில் அனுப்புகிறோம். ஆனால் வேறு இடங்களுக்கான பணிகளுக்கு இங்குள்ள மணலை நாங்கள் பயன்படுத்துவதில்லை. அதற்கு பதிலாக எம் சாண்ட் கலந்த கலவையை தயார் செய்து அனுப்புகிறோம். ஆனால் மணலை கலந்து அனுப்புவதாக பொய்யான குற்றச்சாட்டை பரப்பி வருகிறார்கள். நாங்கள் வேறு பணிகளுக்கு இங்குள்ள மணலை பயன்படுத்தக்கூடாது என பொதுப்பணித்துறை உத்தரவிட்டுள்ளது. எங்களை கண்காணிப்பதற்காக பொதுப்பணித்துறை சார்பாக ஒரு அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், இங்குள்ள கிராமத்தை சேர்ந்த சிலர் கோவில் கட்ட 10 லட்சம் கொடு, 5 லட்சம் கொடு என்று எங்களிடம் வந்து மிரட்டிக் கேட்கிறார்கள். அவர்களுக்கு எப்படி பணம் கொடுக்க முடியும்? அதன் காரணமாகவே அவர்கள் வேறு பணிக்கு இங்குள்ள மணலைக் கலந்து அனுப்புவதாக தவறான தகவல்களை பத்திரிகை, ஊடகத்தினரிடம் கூறி எங்களை மிரட்டுகிறார்கள். இங்கு எந்தத் தவறும் நடக்கவில்லை" என்றார்.

இதுகுறித்து ஊர் முக்கியஸ்தர்களிடம் கேட்டோம். "கோவில் கட்ட பணம் கேட்டு மிரட்டியதற்கு என்ன ஆதாரம் உள்ளது என்று கேட்டால் எதுவும் சொல்ல மறுக்கிறார்கள். இதன்மூலம் அவர்கள் செய்யும் தவறுக்கு கிராம மக்களான எங்கள் மீது பழி போடுகிறார்கள். எனவே வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, காவல்துறையினர், மணல் சுரண்டப்படுவதை தடுத்து நிறுத்தி எங்கள் கிராமங்களையும், நிலத்தடி நீர் வளங்களையும் பாதுகாக்க வேண்டும்" என்றார்.

மணல் கடத்தலை தடுக்கக்கோரி வரும் 13ஆம் தேதி பெண்ணாடம் பஸ் நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர். இந்த நிலையில் தமிழகத்தில் கடலூர் மாவட்டத்தில் 17, ராணிப்பேட்டை மாவட்டத்தில் 4, வேலூர் மாவட்டத்தில் 3, விழுப்புரம் மாவட்டத்தில் 2 என மொத்தம் 26 இடங்களில் புதிய மணல் குவாரிகள் திறக்கப்படப்போவதாக நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்திருப்பது, சமூக ஆர்வலர்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

**-எஸ்.பி.எஸ்.**

கொலையான வழக்கறிஞர் சக்கரவர்த்தி



சடலமாக அக்ரி காமராஜ்



# அரசியல் பிரமுகர்கள் கொலை! ரவுடிகளிடம் புழங்கும் துப்பாக்கி!

## –கோமாவில் உளவுத்துறை!

**ரா**ணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் நகரில் வசித்தவர் வழக்கறிஞர் சக்கரவர்த்தி. ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட பா.ம.க. இளைஞரணிச் செயலாளராக இருந்தார். கடந்த ஜூன் 11-ஆம் தேதி நண்பர்களுடன் மது அருந்தி விட்டு இரவு 11 மணிக்கு அரக்கோணம் சாலையிலுள்ள தனது வீட்டுக்கு சென்று கொண்டிருந்தவர் திடீரென கீழே விழுந்தார், எழுந்திருக்கவில்லை. அதைப் பார்த்த சிலர் அவரது வீட்டுக்கு தகவல் தந்து அவரை சோளிங்கர் அரசு மருத்துவமனைக்கு தூக்கிச் சென்றனர். மருத்துவர்கள் அவர் இறந்து விட்டார் எனக் கூறினர். அவர், குடிபோதையில் தடுமாறி கீழே விழுந்து இறந்துவிட்டார் என நினைத்தனர்.

ஜூன் 12-ஆம் தேதி காலை உறவினர்கள் இது விபத்தல்ல, சந்தேக மரணம் எனச்சொல்லி சாலைமறியல் செய்தனர். போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் வரட்டும், கண்டிப்பாக விசாரித்து நடவடிக்கை எடுக்கிறோம் எனச்சொல்லி கூட்டத்தைக் கலைத்தது போலீஸ். அவர் விழுந்த இடத்திலிருந்த சி.சி.டி.வி. கேமரா பதிவை ஆய்வுசெய்தபோது, ஸ்பீட் பிரேக் மீது சக்கரவர்த்தியின் பைக் பொறுமையாக ஏறி இறங்குகிறது, அவரை க்ராஸ் செய்து ஒரு பைக்கில் இரண்டுபேர் போகிறார்கள், அவர்கள் தாண்டவும் அவர் கீழே விழவும் சரியாக இருக்கிறது. இவர் கீழே விழறார், இவுங்க ஏன் அப்படியே போறாங்க, அவர்கள் யார்? என விசாரணையை துவங்கினர்.

அதேநேரத்தில் வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற உடற்கூராய்வில், சக்கரவர்த்தியின் பின்னந்தலையில் ஒரு புல்லட் பாய்ந்திருக்கிறது, அதனால்தான் மரணம் என்றதும் அதிர்ச்சியான எஸ்.பி. விவேகானந்தா, மூன்று தனிப்படைகள் அமைத்து கொலைகாரர்கள் யார் எனத் தேடத்துவங்கினார். வண்டி ஓட்டியது பிரபு, மாதவன் எனத்தெரிந்து அவர்களை கைதுசெய்யச் சென்றபோது, தப்பி ஓடியதாக சொல்லி பிரபுவின் காலில் சுட்டு பிடித்திருக்கிறது போலிஸ். விசாரணையில், மாதவன் பைக் ஓட்ட, பின்னால் அமர்ந்திருந்த பிரபு ஏர்கன்னால் சக்கரவர்த்தியின் பின்மண்டையில் சுட்டதாகத் தெரிவித்துள்ளான்.

இதன் பின்னணி குறித்து போலீஸ் மற்றும் பா.ம.க. தரப்பில் விசாரித்தபோது, பா.ம.க.வில்

www.nakkheeran.in

நிர்வாகியாக இருந்தவர் ரெண்டாடி சீனுவாசன். கறிக்கடை வைத்திருந்தார், கட்டப்பஞ்சாயத்து, மணல் கடத்தல், கஞ்சா விற்பனை என காவல் துறையின் சரித்திரப் பதிவேடு குற்றவாளியாக இருந்தார். பா.ம.க.விலிருந்து விலகி பாதுகாப்புக் காக பா.ஜ.க.வில் சேர்ந்து பா.ஜ.க. ஊராட்சி மேம்பாட்டுப் பிரிவின் நிர்வாகியாக இருந்து வந்தார். சோளிங்கர் பா.ம.க. ஒ.செ.வாக இருந்தவர் வேலம்.பிரகாஷ். இவரும் மணல் கடத்தல், கட்டப்பஞ்சாயத்து செய்துவந்தார். பா.ம.க. இளைஞர் சங்க செயலாளராக இருந்த வழக்கறிஞர் சக்கரவர்த்தி பைனான்ஸ் தொழிலும் செய்துவந்தார். மூவரும் ஒரே சமூகம், ஒரே கட்சியில் இருந்தனர்.

சீனுவாசன் பிரபு என்கிற இளைஞன் தனது குடும்பத்தைவிட்டு பிரிந்து சீனுவாசனுடனே இருந்தான். பிரபுவின் அண்ணன், பிரகாஷிடம் வந்து முறையிட்டார். பிரபுவை அவன் வீட்டுக்கு அனுப்பிவச்சிடு என சீனுவாசனிடம் சொல்ல, 'நீ யார்ரா அதைச் சொல்ல' எனக் கேட்க அது சண்டையானது. அதனைத் தொடர்ந்து பிரகாஷ்-சீனுவாசன் இடையே பணம் கொடுக்கல்- வாங்கல் பிரச்சனை வந்தது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இருவரும் அடித்துக்கொள்ள, அந்த சண்டையில் பிரகாஷின் சுண்டுவிரலை சீனுவாசன் வெட்டிவிட்டார். இதற்குப் பழிவாங்கவேண்டும் என சபதமெடுத்த பிரகாஷ் 2025, மார்ச் 8-ஆம் தேதி சீனுவாசனை அவரது நிலத்தில் வைத்து படுகொலை செய்தார். அந்த வழக்கில் பிரகாஷ் உட்பட 8 பேரை போலீஸ் கைதுசெய்து 7 பேர் மீது குண்டாஸ் போட்டது.

சீனுவாசன் கொலையில் சக்கரவர்த்திக்கும் தொடர்புள்ளது என சீனுவாசனின் ரவுடி தொழிலின் வாரிசான பிரபு புகார் சொன்னான். அது பொய் எனக்கூறி போலீஸ் எடுத்துக்கொள்ளவில்லை. சிறையிலிருந்த பிரகாஷ், இந்த வழக்கை வழக்கறிஞர் சக்கரவர்த்தி நடத்தட்டும் எனச் சொன்னதால் சக்கரவர்த்தி நடத்தினார். 'அவன்களுக்கு ஆஜராகாத' என சக்கரவர்த்தியை மிரட்டியுள்ளான் பிரபு. அதை அவர் போலீஸாரிடம் சொல்லியபோது, 'அவனெல்லாம் ஒரு ஆளா?' எனச்சொல்லி கண்டுகொள்ளவில்லை. 7 பேர் மீதான குண்டாஸை உடைத்து ஜாமீன் வாங்கியவர், ஜூன் 12-ஆம் தேதி நீதிமன்றத்தில் ஜாமீன்தாரர்களை ஆஜர்படுத்தி 7 பேரையும் வெளியே எடுப்பதற்கான வேலைகளைச் செய்த நிலையில்தான் 11-ஆம் தேதி இரவு படுகொலை செய்யப்பட்டார்.

கைதான பிரபு, மாதவன், தினேஷ்குமார்



கொலைசெய்வதற்கு நான்கு நாட்களுக்கு முன்பாக சக்கரவர்த்தி வீடுள்ள தெருவில் 5 தெருநாய்களுக்கு விஷம்வைத்துக் கொன்றுள்ளார்கள். ஓடும் பைக்கிலிருந்து ஒருவரை குறிபார்த்து சுடுவதற்கு கண்டிப்பாக பயிற்சி தேவை. ரிவெஞ்ச் மர்டர் நடக்கிறது, கொலையானவனின் கேங் என்ன செய்கிறதென உளவுப்பிரிவு, ஓ.சி.ஐ.யூ. டீம் நோட்டம் விடவில்லையா? என்கிற கேள்வியெழுப்பி காவல்துறை அதிகாரிகளை சந்தித்து குற்றம்சாட்டியுள்ளார்கள் ராணிப்பேட்டை பா.ம.க. நிர்வாகிகள்.

## தமிழக ரவுடிகளிடம் புழங்கும் துப்பாக்கிகள்!

அரக்கோணம் நகராட்சி கவுன்சிலர் பாபு. ஹோட்டல் நடத்துகிறார், பைனான்ஸ் தொழிலும் செய்கிறார். கடந்த மே மாதம் பணம் கொடுக்கல் வாங்கல் தகராறில் பாபுவின் அலுவலகத்தில் பாபுவுக்கும் பணம் வாங்கிய தரப்புக்கும் இடையே தகராறு. பாபு, அவரது தந்தை உட்பட 4 பேரை சரமாரியாக வெட்டிவிட்டு எஸ்கேப்பாகிறது ஒரு கும்பல். இந்த வழக்கில் 8 பேர் கைதாகின்றனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில், பாபு துப்பாக்கி காட்டி மிரட்டினார், அவர் எங்களைப் போடறதுக்கு முன்னாடி நாங்க போடணும்னுதான் இப்படிச் செய்தோம் எனச்சொல்ல, போலீஸ் அதிர்ச்சியாகிறது. சிகிச்சை முடிந்துவந்த பாபுவைத் தூக்கிய போலீஸ், இரண்டு பிஸ்டல், தோட்டாக்களை பறிமுதல் செய்தது. ராஜஸ்தானிலிருந்து வாங்கித்தந்ததாக தினேஷ்குமார் என்பவனும் கைதுசெய்யப்



கவுன்சிலர் பாபு

www.nakkheeran.in



**ஓடும் பைக்கிலிருந்து ஒருவரை குறிபார்த்து சுடுவதற்கு கண்டிப்பாக பயிற்சி தேவை. ரிவெஞ்ச் மர்டர் நடக்கிறது, கொலையானவனின் கேங் என்ன செய்கிறதென உளவுப்பிரிவு, ஓ.சி.ஐ.யூ. டீம் நோட்டம் விடவில்லையா?**

பட்டான். இப்போது துப்பாக்கியால் சுட்டு அரசியல் பிரமுகர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். ரவுடிகளிடம் துப்பாக்கி புழங்குவது பொதுமக்களை மட்டுமல்ல, அரசியல்கட்சியினரையும் அதிர்ச்சியடைய செய்துள்ளது. ரவுடிகளைக் கண்காணிக்கும் பிரிவு, க்யூ ப்ராஞ்ச், எஸ்.பி.சி.ஐ.டி, ஐ.எஸ். அனைத்தும் கோமாவில் உள்ளது என்பதையே இச்சம்பவங்கள் காட்டுகின்றன எனக் குற்றம்சாட்டுகிறார்கள்.

சாதாரண ரவுடிகளிடம் துப்பாக்கி புழங்குவது குறித்து ஓ.சி.ஐ.யூ. பிரிவினரிடம் கேட்டபோது, "பீகார், ராஜஸ்தான், மத்தியபிரதேசத்திலிருந்து வரும் தொழிலாளர்களுடன் கூட்டத்தோடு கூட்டமாக குற்றச்சம்பவத்தில் ஈடுபட்டு போலீஸால் தேடப்படுபவர்கள், மாவோயிஸ்ட்கள் தமிழ் நாட்டுக்குள் தொழிலாளி போர்வையில் வந்து பதுங்குகின்றனர். அப்படிப்பட்டவர்கள் மூலமாக 20 ஆயிரம், 30 ஆயிரத்துக்கு எல்லாம் பிஸ்டல்கள் விற்கிறார்கள். அதைத்தான் இங்குள்ள ரவுடிகள் பந்தாவுக்காக வாங்கிவைத்துள்ளார்கள். தெலுங்கானா, ஒரிசா பகுதியிலிருந்து கஞ்சா கடத்திவருகிறார்கள், அது பெரிய மூட்டை. அதனால் அதனை ஈஸியாக ஸ்மெல் செய்து பிடிக்கமுடிகிறது. துப்பாக்கியை துணிப்பையில் போட்டு கொண்டுவந்துவிடுகிறார்கள். அதனால் பிடிப்பது சிரமமாக இருக்கிறது. அரக்கோணத்தில் சிக்கியதுபோல் சிக்கினால்தான் உண்டு'' என கவலை தெரிவிக்கிறார்கள்.

## வழக்கறிஞரைப் பலிவாங்கிய தண்ணீர் பிரச்சனை!

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கத்தை அடுத்த சொரகுளத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர் அக்ரி.காமராஜ். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் இளம்சிறுத்தைகள் எழுச்சிப் பாசறையின் மாவட்ட அமைப்பாளராக இருந்தார். இவர் காவல்துறையின் சரித்திரப்பதிவேடு குற்றவாளி பட்டியலிலும் உள்ளார். கடந்த ஓராண்டாக விழுப்புரம் மாவட்டம் செஞ்சி நீதிமன்றத்தில் வி.சி.க. வெற்றிச்செல்வனிடம் ஜூனியராக சேர்ந்து பயிற்சி பெற்றுவருகிறார். காமராஜின் பக்கத்து வீட்டில் வசிப்பவர் சுமன். அப்பகுதி வி.சி.க. முகாம் பொறுப்பாளர், ஒ.செ. பதவிக்கும் விண்ணப்பித்துள்ளார். இவர்கள் வீட்டுக்கு முன்பாக பொதுக்குழாய் சின்டெக் டேங்க் உள்ளது. இரண்டு மாதத்துக்கு முன்பு, தண்ணீரை வீணாக்குகிறார்கள் என சுமன் குடும்பத்தாருடன் காமராஜ் சண்டைபோட்டுள்ளார். இது அடிதடியாகி கலசப்பாக்கம் காவல் நிலையத்தில் இரு தரப்பு மீதும் எப்.ஐ.ஆர். பதிவாகியுள்ளது.



கொலையான சீனிவாசன்

இந்நிலையில்தான் ஜூன் 17-ஆம் தேதி காலை 7 மணிக்கு நாயுடு மங்கலத்தில் காமராஜ், அவருடன் ஒரு பெரியவர் என இருவரும் டீ குடித்துவிட்டு, வீட்டுக்கு பைக்கில் செல்லும்போது, நாயுடுமங்கலம் ரயில்வே கேட்டருகே காமராஜை 9 பேர் கொண்ட கும்பல் சுற்றிவளைத்து இரும்பு ராடால் அவரது மண்டையில் அடித்துச்சாய்த்துள்ளனர். நிலத்தில் வேலை பார்த்த சிலர் இதைப்பார்த்தும் காமராஜ் மீதான கடுப்பில் யாரும் அருகே வரவில்லை. அந்தக் கும்பல் அடித்துப்போட்டுவிட்டு எஸ்கேப்பாக, மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காமல் இறந்துள்ளார். தாக்கிய கும்பலில் சுமன் உறவினர்கள் கோபி, பார்த்திபன் இருந்ததால் அவர்கள் உட்பட பலரை கைதுசெய்துள்ளது போலீஸ். எஸ்.பி. தனிப்பிரிவு, உளவுத்துறை போலீஸார் இந்த விவகாரத்தில் சரியாக விசாரித்து நோட்டம் போடாததாலே இப்படியொரு மர்டர் நடந்துள்ளது என குற்றம்சாட்டுகிறார்கள் சிறுத்தைகள்.

**-து.ராஜா**

படங்கள்: எம்.ஆர்.விவேகானந்தன்



அறுபடாமலே புறக்கணிக்கப்படுவது செருப்பு... சில நல்ல மனிதர்களைப் போல!



**ஜி.அர்ஜுனன், செங்கல்பட்டு**

***ஆணின் அன்புக்கும் பெண்ணின் அன்புக்கும் வித்தியாசம் என்ன?***

அன்பில் ஆண்- பெண் வித்தியாசம் இல்லை. ஆனால் அதை வெளிப்படுத்தும் விதத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசமிருக்கலாம்..

**மு.முஹம்மது ரபீக் ரஷாதீ, விழுப்புரம்**

***டாஸ்மாக்குக்கு எதிரான போராட்டத்தை குற்றச்செயலாக கருத முடியாது என்று கூறியுள்ளதே உயர்நீதிமன்றம்?***

இரண்டு கழகங்களும் எதிர்க்கட்சி வரிசையில் அமரும்போது டாஸ்மாக்கை மூடவேண்டுமென சொல்கின்றன. ஆட்சியில் அமர்ந்ததும் நிலைப் பாட்டை மாற்றிக்கொள்கின்றன. எனவே, நிச்சயமாக வரவேற்கப்படவேண்டிய தீர்ப்புதான். எந்தவொரு போராட்டமும் வன்முறையாக மாறாமல் அமைதியாக நீடிக்கும்வரை அனுமதிக்கப் பட வேண்டும். அதுதான் ஜனநாயகத்துக்கு அழகு.



வயநாடு நிலச்சரிவு

**சிவா, கல்லிடைக்குறிச்சி.**

**விலை உயர்வைப் பார்த்தால், தங்கம் இனி ஏழைகளுக்கு எட்டாக்கனிதானா?**

ஏற்கெனவே 22 காரட்டைத் தாண்டி 18, 16 காரட் தங்கம் வர ஆரம்பித்துவிட்டது. பெரிய தங்க நகைக்கடைகள் குறைந்த காரட் நகைகளை விற்பனைக்கு விட ஆரம்பித்துவிட்டன. விலை உச்சத்துக்குப் போகப் போக, தங்கத்தின் காரட் பள்ளத்துக்குப் போகும். தங்கம் சர்வதேச கரன்ஸி. அதன் விலையுயர்வை நாம் கட்டுப்படுத்த முடியாது. ஏழைகள் பெரும்பாலும், கல்யாணம் போன்ற சடங்குகளுக்காக மட்டும்தான் தங்கம் வாங்குகின்றனர். முதலீட்டுக்காக தங்கம் வாங்கும் ஏழைகள் குறைவு. தங்கம் விலை கட்டுப்படியாகா மல் போகும்போது, வரதட்சணை தரமுடியாது என்ற உறுதிப்பாட்டை பெண்ணைப் பெற்ற கோடிக்கணக்கான பெற்றோர் அனைவரும் ஒரே சமயத்தில் எடுத்தால், தங்கம் விலையும் இறங்கும். தேவையற்ற சம்பிரதாயத்தின் பிடியும் விலகும்.

**சி. கார்த்திகேயன், சாத்தூர்**

**தி.மு.க. கூட்டணியிலிருந்து விலகி பி.ஜே.பி. கூட்டணிக்கு பல கட்சிகள் வரும் என்கிறாரே தமிழிசை சௌந்தரராஜன்?**

வருமோ வராதோ, அது ஒரு உளவியல் தாக்கு தல்தான். அந்தப் பக்கம் அழைத்துக் கொண்டே யிருக்கிறார்கள். இங்கே போதிய இடம் கிடைக்க வில்லையென்றால் அந்தப் பக்கம் தாவலாம் என்ற தடுமாற்றம் வந்தாலே ஆதாயம்தானே. அதைத் தான் பா.ஜ.க. பண்ணிக்கொண்டேயிருக்கிறது. தமிழிசையின் யுக்தி பலிக்கிறதா பார்க்கலாம்!

**மல்லிகா அன்பழகன், சென்னை -78**

**ஐ.நா.வின் காஸா போர் நிறுத்த தீர்மானத் தில் ஓட்டளிப்பதை இந்தியா தவிர்த்தது பற்றி?**

அணிசேரா நாடு என்ற நிலையிலிருந்து இந்தியா எப்போதோ மாறிவிட்டது. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததுமுதலே இஸ்ரேலுடன் கூடுதல் நெருக்கத்தைப் பேணிவருகிறது. நேரடியாக காஸா போர் நிறுத்தத்துக்கு ஆதரவாக ஓட்டளித்தால், இஸ்ரேலுக்கு வலிக்கும். எதிராக வாக்களித்தால், எண்ணெய் வளம் வைத்திருக்கும் ஈரான் போன்ற நாடுகளின் கோபத்துக்கு ஆளாக வேண்டிவரும். கூடவே சீனாவுக்கு ஆதரவு நிலைப்பாடு எடுத்ததுபோலாகி அமெரிக்காவின் கோபத்துக்கும் ஆளாக வேண்டிவரும். அதனால் ஓட்டுப் போடாமல் இரண்டும்கெட்டான் நிலைப்பாடு எடுக்கிறது இந்தியா.

# மாவலி பதில்கள்

**வாசுதேவன், பெங்களூரு**

**கலை உலக பிரபலங்களின் திருமணங்கள் முக்கியத்துவம் பெறுகிறதே?**

நமது வேடிக்கை பார்க்கும் மனோபாவத்தால் தான். நம் வீட்டுத் திருமணத்தில் நடைபெறுவது தான் அங்கேயும் நடைபெறும். அங்கே கூடுதலாக காசு செலவிடப்படும். பிரமாண்டமான திருமண அரங்கில் ஒன்றுகூடுவர். சக நடிக- நடிகையர், கலைஞர்கள் தட்டுப்படுவார்கள் என்பதுதான் வித்தியாசம். இப்போது அதையும் தாண்டி, அதை ஓ.டி.டி.யில் விற்கவும் தொடங்கியிருக்கிறார்கள். ஹாலிவுட்டில் பிரபலங்கள் கர்ப்பகால நிர்வாண போஸ் கொடுக்க, குழந்தையின் புகைப்படத்தை முதன்முதலில் ஊடகங்களில் வெளியிட என்று காசு பார்க்கிறார்கள். அந்த வழக்கம் நாளை இங்கேயும் வேர்பிடிக்கக்கூடும்.

**எஸ்.அர்ஷத் ஃபயாஸ், குடியாத்தம்**

**வயநாடு நிலச்சரிவு பேரிடரில் பாதிக்கப் பட்டோரின் கடன்களைத் தள்ளுபடி செய்ய முடியாது என கேரள உயர்நீதிமன்றத்தில் ஒன்றிய அரசு பதிலளித்துள்ளதே?**

வயநாடு மக்களுக்கு வலித்தால் என்ன செய்ய முடியும்? அம்பானி, அதானிகளுக்கு வலித்தால் மட்டும்தான் கடன் தள்ளுபடி என்ற நிலைப்பாட் டோடு இருக்கிறது ஒன்றிய அரசு. பதினோரு ஆண்டுகளில் 25 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகையை கார்ப்பரேட்டுகளுக்குத் தள்ளுபடி செய்துள்ளது ஒன்றிய அரசு. வயநாடு பகுதியில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டவர்களின் கடன் தொகை ஆயிரம் கோடிகூட இருக்காது. இருந்தா லும் அதைத் தள்ளுபடி செய்ய மனமில்லை. ●

www.nakkheeran.in


எடப்பாடியுடன் ராஜா



ராஜா



மனைவி அனுஷாவுடன் ராஜா



# மிரட்டும் மாஜி அமைச்சர்! மோசடி வழக்கில் மகன் கைது!



சண்முகநாதன்

தனது நிறுவனங்களில் முதலீடு செய்தால் வருமானத்திலும், லாபத்திலும் பங்கு கொடுப்பேனென்று ஆசை வார்த்தை சொல்லி, சொந்த அக்காவிடமே நிதி மோசடி செய்த ராஜா என்பவரை கைது செய்துள்ளோம் என்றது சென்னை மத்திய குற்றப்பிரிவு காவல் துறை. கைதானவர் தூத்துக்குடி மாமன்ற அ.தி.மு.க. உறுப்பினரும், அ.தி.மு.க.வின் தூத்துக்குடி தெற்கு பகுதி செயலாளராகவும் பதவி வகிக்கும் ராஜா என்பதும், அவர் முன்னாள் அமைச்சரான சண்முகநாதனின் மகன் என்பதும், இதன் பின்னணியில் காதல் திருமண பஞ்சாயத்து இருப்பதும் அதிர்ச்சியைத் தந்துள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் சென்னை மத்திய குற்றப்பிரிவில் புகார்

www.nakkheeran.in

**நீ யாரையும் ஜெயிக்கவும் வேண்டாம், யாரிடமும் தோற்கவும் வேண்டாம் -உனக்கு கொடுக்கப்பட்ட இந்த வாழ்க்கையை ஆனந்தமாக அனுபவித்துவிட்டுப் போ!**

ஒன்றை அளித்துள்ளார் சென்னை ஐயப்பன் தாங்கல் பிரெஸ்டீஜ் வில்லா விஸ்டா அடுக்குமாடி குடியிருப்பை சேர்ந்த மருத்துவரான விண்ணரசி. புகாரில், ‘‘தற்பொழுது சென்னை ராஜா அண்ணாமலைபுரம் சாந்தோம் நெடுஞ்சாலை வடக்கு வீத் கோட்டை தெருவில் வசித்து வரும் தூத்துக்குடி மாவட்டம், பண்டாரவிளை பகுதியை சேர்ந்த சண்முகநாதன் மகன் ராஜா என்ற எஸ்.பி.எஸ்.ராஜா என்பவர் நடத்திவரும் நிறுவனத்தில் முதலீடு செய்தால் லாபம் மற்றும் முதலீட்டிற்கான வருவாயும் தருகிறேன் என ஆசை வார்த்தை கூறியதால், உடன் பிறந்த தம்பி என்கிற நம்பிக்கையின் அடிப்படையில் முதலில் ரூ.80 லட்சம் கொடுத்தோம். அதனடிப்படையில், 2018, அக்டோபர் மாதத்தில், ஓம் மீனா பார்மா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் முதலீட்டாளராக சேர்த்துக் கொண்டார்.

சிறிது நாள் கழித்து இன்னும் பணம் கொடுத்தால் நிறுவனத்தின் 16 சதவிகித பங்குகளை உங்களுக்குக் கொடுக்கிறேன். இதனால் நீங்கள் நிறுவனத்தின் இயக்குநராகக்கூட வாய்ப்பு இருக்கின்றது. வருமானமும் கோடிக்கணக்கில் இருக்கும் என மீண்டும் ஆசைவார்த்தை காண்பித்ததால், என்னுடைய கணவருக்கு சொந்தமாக ஸ்ரீபெரும்புதூரில் இருக்கும் நிலத்தை வங்கியில் அடமானம் வைத்து ரூ.11 கோடி கொடுத்தார். ஏறக்குறைய எங்களின் முதலீட்டுப் பணம் ரூ.12 கோடியாக உயர்ந்தது. ஆனால் அந்த பணத்தை எங்களுக்கு தெரியாமல் அவரின் மற்றொரு நிறுவனமான அஷூன் எக்ஸிம் நிறுவனத்திற்கு மாற்றிக்கொண்டார்.

பின்னர் தூத்துக்குடி மாவட்டம் கட்டாலங்குளத்தில் கோல்டன் ப்ளூ மெட்டல்ஸ் எனும் குவாரியை தொடங்கி என்னை அந்த நிறுவனத்தின் இயக்குநராக்கினார். இதற்காக என்னுடைய 300 சவரன் நகையை அவருக்கு கொடுத்துள்ளேன். பின்னாளில் நான் அந்த நிறுவனத்திலிருந்து ராஜினாமா செய்ததுபோல் போலியாக கடிதம் தயார் செய்து அதனை ஆர்.ஓ.சி.க்கு ஆன்லைன் மூலம் பதிவேற்றம் செய்து, என்னை நிறுவனத்தின் இயக்குநர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அதற்கு பதிலாக அவரது மனைவி அனுஷாவை நியமித்து என்னை ஏமாற்றிவிட்டார். இதுபோக, அவரது அரசியல் எதிர்காலத்திற்காக என்னுடைய கணவர் ரூ.2.75 கோடி கொடுத்துள்ளார். இதுவரை மொத்தமாக ரூ.17 கோடி கொடுத்துள்ளோம். ஆசை வார்த்தை கூறி மோசடி செய்த அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

புகாரின் அடிப்படையில் தீவிர விசாரணை செய்த சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீஸார், நம்பிக்கை மோசடி செய்த எஸ்.பி.எஸ்.ராஜா மற்றும் அவரது மனைவி அனுஷா மீது 409, 420, 485, 468, 471, 34 சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தனர். கூடுதலாக, அவர்கள் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்லாதவாறு விமான நிலையங்களுக்கு, லுக் அவுட் நோட்டீஸ் பிறப்பித்தனர். இதனிடையே, சென்னை விமான நிலையத்திலிருந்து மலேஷியா செல்ல முயன்ற ராஜாவை கைது செய்து சிறையிலடைத்த போலீஸார், அவரது மனைவி அனுஷாவை தேடி வருகின்றனர்.

## -அம்பலத்துக்கு வந்த பினாமி சொத்துக்கள்!

ஸ்ரீவைகுண்டம் தொகுதியை சேர்ந்த முன்னாள் அமைச்சரின் குடும்ப நண்பர் ஒருவரோ, ‘‘எம்.ஜி.ஆர். காலத்தில் கிளைச்செயலாளராக தொடங்கி, நான்கு முறை அமைச்சரான பண்டாரவிளை எஸ்.பி.சண்முகநாதனுக்கு 5 மகள்கள், ஒரே மகன். ஒரே ஆண் வாரிசு என்பதால் பெயருக்கேற்றபடி ராஜாவாகவே வளர்க்கப் பட்டார் சண்முகநாதனின் மகன். தூத்துக்குடி மாவட்ட அரசியலில் என்னுடைய ஒரே வாரிசு என்னுடைய மகன் ராஜா மட்டுமே எனக் கூறிவந்த சண்முகநாதன், தன்னுடைய மகன் ராஜாவை தூத்துக்குடி மாமன்ற உறுப்பினர் பதவிக்கு அ.தி.மு.க. சார்பில் போட்டியிட வைத்தார். 19வது வார்டில் வெற்றிபெற்ற தன்னுடைய மகனை மேயராக்கி அழகு பார்க்கும் ஆசையில் மேயருக்கான வேட்பாளராக்கினார். ஆனால் தோல்வியடைந்தார். இது போனால் என்ன? அவன் கோட்டைக்குப் போகணும்னு எழுதிருக்குலே.. இப்ப கட்சியில் தெற்கு மா.செ.வாக இருக்கேன். இத வைச்சு எம்மகன் ராஜாவை 2026ஆம் ஆண்டு தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதியில்

www.nakkheeran.in



சண்முகநாதன் குடும்பம்

போட்டியிட வைத்து கோட்டைக்கு அனுப்புவேன் என்பார்.

ஒரே மகன் என்பதால் அவருக்கு தேவையான அனைத்தையும் செய்தார். மகள்களும் ராஜாவைத் தான் தாங்கினார்கள். ஆனால் காதல் திருமணம் செய்து முன்னாள் அமைச்சருக்கு மட்டுமில்லாமல் குடும்பத்தையே நெஞ்சை பிடிக்க வைத்தார் ராஜா. ஆரம்பத்திலிருந்தே, ‘அந்த சாதி நமக்கு ஆகாது. அவள விட்டுட்டு வா!’ என ராஜாவுக்கு பல வகையிலும் நெருக்கடி கொடுத்துப் பார்த்தது சண்முகநாதன் குடும்பம். அவர் அசையவில்லை. சென்னையிலேயே மாமனார் ஆதரவில் காதல் மனைவியுடன் வசிக்க ஆரம்பித்தார். இப்ப தேர்தல் நெருங்க ஆரம்பித்துவிட்டது. வேறு வழியில்லை. சொந்த மகளை வைத்து சீட்டிங் அஸ்திரத்தை பிரயோகிக்க ஆரம்பித்திருக்கின்றார் சண்முகநாதன்” என்றார் அவர்.

சென்னையில் m/s Omeena pharma distributors pvt limited, m/s Ashun exim, m/s Golden blue metal pvt limited., என இத்தனை நிறுவனங்களா? அதுபோக கட்டலாங்குளத்தில் 40 ஏக்கர் நிலம், 300 பவுன் நகைகள் எனக் குடும்பப் பிரச்சினையில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சண்முகநாதனின் பினாமி சொத்துக்கள் பட்டியல் வெளியாகிறதே? இப்படி குடும்பத்துக்குள்ளயே அடிச்சிக்கிட்டாத்தான் பினாமி சொத்துகளின் உண்மை நிலவரமே வெளிவரும் போல என இப்பகுதியிலுள்ள வாட்ஸ்-அப் வட்டாரத்தில் வைரலாகி வருகின்றது. இதே வேளையில், அந்த கோல்டன் ப்ளூ மெட்டல்ஸ்தான் இப்போது தற்போதைய அமைச்சர் ஒருவரின் மகன் பெயரில் இருக்கின்றது. வெளியில் எதிர்க்கட்சிகள், உள்ளுக்குள் பிசினஸ் பார்ட்னர்கள் என்பதும் வைரலாகியுள்ளது.

“அனுஷாவும், ராஜாவும் காதலித்துத்தான் திருமணம் செய்துகொண்டார்கள். திருமணத்திற்கு எஸ்.பி.எஸ். தரப்பு ஒத்துக்கொள்ளவேயில்லை. முன்னாள் அமைச்சர் என்பதால் தன்னுடைய அதிகாரத்தை அவர்களிடம் காண்பித்தார். அவருடைய மகள்களும் இந்த திருமணத்தை தடை செய்வதில் மட்டுமே குறியாக இருந்தனர். இதற்கான ஒரே காரணம் அந்தப் பெண் பட்டியலினத்தை சேர்ந்தவர் என்பது மட்டுமே. ராஜாவின் திருமணத்தைத் தடுக்க தற்கொலை மிரட்டல் விடுத்தனர். ஆணவக்கொலை செய்வோமென்றும் மிரட்டிப் பார்த்தனர். எஸ்.பி.எஸ்.ராஜா எதற்கும் மசியவில்லை. காதலில் உறுதியாக இருந்து அந்தப் பெண்ணையே திருமணம் செய்தார். பாதுகாப்பிற்காக பெண் வீட்டாரின் அரவணைப்பில் இருந்தார். இடையில் ‘அந்தப் பெண்ணை விட்டுட்டு வா! உன்னை எம்.எல்.ஏ. ஆக்குகிறேன். உன்னுடைய சகோதரிகளுக்கும் புகுந்த வீட்டில் மரியாதை இருக்கும். இல்லையெனில் நீ வம்பாக சிக்குவாய்!’ என அவரது குடும்பத்தினரால் எச்சரிக்கப்பட்டார் ராஜா. அது இப்படி ஆகுமென்றும், கைது வரை போகுமென்றும் நினைக்கவில்லை. இது முழுக்க முழுக்க ஜோடிக்கப்பட்ட வழக்கு. இப்பொழுது கூறப்பட்ட புகாரில் உள்ள நிறுவனங்களை உற்றுநோக்கினால் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது எனத் தெரியும். நல்லவேளை கொலையாகவில்லை இருவரும்'' என்கிறார் தலைமறைவாக இருக்கும் அனுஷாவின் உறவினர்.

“அவ வேணாம்னு வரட்டும்... அத்தனையும் விலகும்'' என்கிறது சண்முகநாதனின் தரப்பு. ஆகையால் இந்த நாடகம் விரைவில் முற்றுப்பெறும் என்கின்றனர் சண்முகநாதனின் குடும்பத்து நண்பர்கள்.

இந்நிலையில் எஸ்.பி.எஸ்.ராஜாவை கட்சியிலிருந்து நீக்கி அறிவித்துள்ளது அ.தி.மு.க. தலைமை.

**-நா.ஆதித்யா**



எல்லோராலும் கவனிக்கப்படுகிறவனை விட யாராலும் கவனிக்கப்படாதவன் நிம்மதியாக வாழ்கிறான்!



EXCLUSIVE

# யோகா அல்ல... ஹிப்னாடிசம் சீட்டிங் ஜக்கி!

## ஆதாரங்களுடன் பகீர் ரிப்போர்ட்!



"வருகின்ற ஜூன் 21-ஆம் தேதியன்று உலக யோகா தினம்! உடல்ரீதியிலான பிரச்சினைக்கு மருந்துகள் பல இருக்கின்றன. ஆனால், மனரீதியிலான பிரச்சினைக்கு ஒரே தீர்வு யோகாதான். இது இந்தியாவின் பழமையான கலைகளில் ஒன்று. உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதால், இன்றைக்கு 120 நாடுகளில் யோகா பயிற்றுவிக்கப்படுகிறது. உங்கள் உடல், உங்கள் மனம், உங்கள் சக்தி நிலையை எப்படி வைத்துக் கொள்வது என்று உங்களுக்குத் தெரியவில்லை. எனவேதான் உங்களுக்கு மனஅழுத்தம் வருகிறது. ஒருவர் தனக்குள் ஒரு தெளிவான தன்மையில் இருக்கும்போது, மன அழுத்தம் என்பதே வராது. நீங்கள் உங்களை எப்போதும் தளர்வுநிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். இதற்கு தியானம் மிகவும் உதவிசெய்யும். தியானம் மன அழுத்தத்துக்கு மட்டும் தீர்வாக இல்லாமல், அடுத்த பரிமாணத்துக்கு நீங்கள் நகரவும் உதவிசெய்யும். ஆகவே யோகா செய்யுங்கள்.



உங்களுக்கு உதவியாக நான் இருக்கின்றேன்” என அழைப்பு விடுத்துள்ளார் ஈஷா யோகா மையத்தின் நிறுவனரான ஜக்கி வாசுதேவ். “ஜக்கி செய்வது யோகாவே இல்லை. அடிமையாக இருப்பது யோகாவின் வழி அல்ல.. ஜக்கி செய்வது ஹிப்னாடிசம். அதன் மூலம் நம்மை அடிமைப்படுத்தி தன்னுடைய தேவைகளை தீர்த்துக்கொள்கின்றான். இந்தியாவைப் பொறுத்தவரை தனி நபர் ஹிப்னாடிசம் செய்வது தண்டனைக்குரியது” என காவல்துறையையும், நீதிமன்றத்தையும் நாடியுள்ளனர் ஜக்கியால் பாதிக்கப்பட்டோர்.

என்னுடைய மகள்கள் இருவரையும் ஈஷாவிலிருந்து மீட்டுத் தாருங்கள். அவர்கள் இருவரும் ஜக்கியின் ஹிப்னாடிசத்தால் ஈஷாவில் அடிமையாக இருக்கின்றார்கள் என வேளாண் பல்கலைக்கழக ஓய்வுபெற்ற பேராசிரியர் தம்பதியினர் உச்சநீதிமன்ற அபிடவிட்டில் குறிப்பிட்டுள்ளனர். இதுபோலவே தூத்துக்குடி எட்டையபுரம் சாலையிலுள்ள மாரியப்பனும், “எனது மகன் ரமேஷ்பாலகுரு ஹிப்னாடிசத்தால் பாதிக்கப்பட்டு ஈஷாவில் இருக்கின்றான். அவனை மீட்டுத்தாருங்கள்'' என கோவை மாவட்ட எஸ்.பி.யிடம் புகாரளித்து ஏமாற்றத்துடன் காத்திருக்கின்றார்.

கோவை மாவட்டத்திலுள்ள ஈஷா யோக மையத்தின் நிறுவனரான சத்குரு என்று தனக்கு, தானே பெயர் சூட்டிக்கொண்ட ஜக்கி @ ஜெகதீஷ் வாசுதேவ், ஜக்கியால் விபூதி சீடர் என பட்டப்பெயர் வைக்கப்பட்டு ஜக்கி உடனிருந்து அனைத்து பொறுப்புகளையும் கவனித்துவந்த பாரதி வரதராஜ், ஈஷா ஹோம் ஸ்கூல் & ஈஷா சம்ஸ்கிருதி பள்ளியின் நிர்வாகியாக இருக்கும் மா பிரத்யுதா மற்றும் தற்போதைய ஈஷா நிர்வாகி தினேஷ்ராஜா ஆகியோர் ஈஷாவினை நிர்வகித்துவருகின்றனர். ஈஷா யோக மையத்தில் குழந்தைகளுக்கான இரண்டு விதமான திறன்மிக்க பள்ளிகள் இருப்பதாகவும், பெரியவர்களுக்கு பலவிதமான யோக தியான வகுப்புகள் சொல்லிக் கொடுப்பதாகவும் முக்கியமாக இந்த சாம்பவி மகாமுத்ரா (Inner engineering), பாவஸ்பந்தனா (BSP), ஷம்யமா (Silence). தியான வகுப்புகளை கற்றுக் கொண்டால் நீங்கள் நல்ல ஆரோக்கியமான உடல், மனநிலையை அடையலாம் என இந்து சைவ மத கருத்துக்களையும், நம்பிக்கை வார்த்தைகளையும் மோசடியாகக் கூறி பல இடங்களில் விளம்பரப்படுத்தி பணம் பார்த்து வருகிறார்.

“எனது மூத்த மகன் ரமேஷ் பாலகுரு அடுத்தடுத்து ஈஷாவின் தியான வகுப்புகளில் கலந்துகொண்டு அடிக்கடி கோவையிலிருக்கும் ஈஷா யோக மையத்திற்கு போய் வந்துகொண்டு இருந்தார். இந்நிலையில் கடந்த 2011-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வீட்டிற்கு வந்து தான் அங்கேயே மொட்டையடித்து துறவறம் பூண்டு வாழப்போகிறேன் என்றதால் அதிர்ச்சியடைந்தோம். அப்போது ஈஷா யோக மையத்திற்கு சென்றவர் தற்போதுவரை வீடு திரும்பவில்லை. இருமுறை நேரில்சென்றும் பலமுறை



மாரியப்பன் -மனைவியுடன்



ரமேஷ்பாலகுரு

பேராசிரியர் காமராஜ் -மனைவியுடன்



ஜக்கி பிடியில் சிக்கியுள்ள காமராஜ் மகள்கள்



தொலைபேசியில் அழைத்தும் வீட்டிற்கு வர மறுத்துவிட்டார்.

அவர் யோகா எனும் பெயரில் ஜக்கியால் மூளைச்சலவை செய்யப்பட்டு ஹிப்னாடிசத்தால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெரிந்து கொண்டோம். பின்னர் தற்போது விசாரித்துத் தெரிந்துகொண்டதில் இந்தியாவில் ஹிப்னாடிசம் சம்பந்தமாக தனியாக சட்ட விதிமுறைகள் எதுவும் இல்லை என்றும், இதை நன்கு அறிந்து கொண்ட சத்குரு என்ற ஜக்கி @ ஜெகதீஷ் வாசுதேவ் தியான வகுப்புகளுக்கு வரும் நபர்களின் ஆன்மீக நம்பிக்கையை பயன்படுத்தி தியானம், தீட்சை என கூறி அவர்கள் அனுமதியில்லாமல் தவறான நோக்கத்துடன் ஹிப்னாடிசம் செய்கிறார் என்பது தெரியவந்தது. என் மகனைப்போல் பலரும் ஜக்கியின் ஹிப்னாடிசத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே எனது மகனை மீட்க வேண்டுகிறேன்" என கோவை மாவட்ட எஸ்.பி.க்கும், ஆலாந்துறை இன்ஸ்பெக்டருக்கும் புகார் மனு அனுப்பியுள்ளார்கள் தூத்துக்குடி மாரியப்பன் -தமிழ்ச்செல்வி தம்பதியினர்.

தமிழ்நாட்டில் செயல்படும் ஈஷா யோகா மையத்தில் மன அமைதிக்காக சென்றவர்களில் கடந்த 15 வருடங்களில் மட்டும் சிலர் காணாமல் போயிருக்கிறார்கள், சிலர் தற்கொலை செய்துகொண்டார்கள். இதுதொடர்பாக சமீபத்தில் பேராசிரியர் காமராஜ் ஈஷா யோகா மையத்தில் சிக்கியுள்ள தனது இரண்டு மகள்களை மீட்க தொடர்ந்த வழக்கில் தமிழக காவல்துறை சார்பாக உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கையின் ஒரு பகுதியோ, "ஏழு மரண வழக்குகள், ஆறு பேர் காணாமல் போயுள்ள வழக்குகள் கடந்த பதினைந்து வருடங்களில் மட்டும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதில் காணாமல் போனவர்களில் திரும்பக் கிடைத்ததாக ஐந்து வழக்குகள் மூடப்பட்டு, ஒரு வழக்கு விசாரணை இன்னும் நிலுவையில் உள்ளது. ஏழு சந்தேக மரண வழக்குகளில் ஐந்து மரண வழக்குகள் தற்கொலை என முடித்துவைக்கப்பட்டுள்ளது.

2022-ல் நடந்த இரண்டு சந்தேக மரண வழக்குகளில் தற்கொலை கடிதம் (suicide note) மற்றும் மரண ஆய்வு (forensic report)க்காக நிலுவையில் உள்ளது. (Cr.No.191/2022) சுபஸ்ரீ என்ற பெண்ணின் சந்தேக மரண வழக்கு ஈஷாவில் சம்யமா (silence) என்ற தியான வகுப்பில் கலந்துகொண்டிருக்கும்போது திடீரென வெளியேறி காணாமல்போய், பின்னர் கிணற்றில் சடலமாக கிடைத்த சம்பவம், அதைத் தொடர்ந்து சி.சி.டி.வி. ஆதாரங்களை ஆய்வு செய்யும் பணிகள் என பல்வேறு சந்தேகங்களுடன் காவல்துறை விசாரணை இன்னும் நிலுவையில் உள்ளது. மேலும் இந்த அறிக்கையில் மனநல மருத்துவர்களின் குழுவும் ஆய்வு மேற்கொண்டுள்ளது. அவர்கள் அங்கே உள்ளவர்கள் சிலரின் மனநிலையில் வேறுபாடு (moodswings) காணப்படுகிறது, ஆனால் இதை உறுதியாக முடிவு செய்ய நேரமின்மை காரணமாக எந்த மருத்துவப் பரிசோதனையும் செய்யப்படவில்லை. இதை உறுதிப்படுத்த பரிசோதனைகள் தேவை என்று தெரிவித்துள்ளனர்.

பேராசிரியர் காமராஜ் உச்ச நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் (affidavit) ஏற்கனவே ஈஷாவில் தியான பயிற்சி முடித்த முன்னாள் தலைமைக் காவலர், அங்கு ஹிப்னாடிசம் நடப்பதாக பேராசிரியர் காமராஜ் சார்பில் தனியாக வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளதாகவும், அதில் ஈஷாவில் தியானப் பயிற்சி எடுத்து அதன்பின்னர் சென்னையிலுள்ள ஒரு பிரபல



ஸ்ரீவில்லிபுத்தூர்- மேகமலை காப்பக மண்டலத்தில்
கனிமவளக் கடத்தல்: அதிகாரிகள் ஆய்வு

பாரதி வரதராஜ்




தினேஷ்ராஜா



மருத்துவ ஹிப்னோதெரபிஸ்ட் மூலமாக உண்மையை உணர்ந்து ஈஷாவில் நடைபெறும் பயிற்சிகள் யோகா, தியானம் மட்டுமல்ல, ஹிப்னாடிசமும் கலந்தே நடத்தப்படுகிறது. பயிற்சியில் உள்ளவர்கள் தியானம் என்ற பெயரில் ஹிப்னாடிசம் செய்து மாறுபட்ட மனநிலையில் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இந்த தீவிரமான பயிற்சிகளால் கடுமையான மனநிலை பாதிப்புகள் ஏற்படலாம். இது குறித்த அரசாங்க விசாரணை தேவை" என்கின்றது.

ஹிப்னாடிசம் செய்வதற்கு பல நாடுகளில் சட்ட விதிமுறைகள் உள்ளன என்றும், உதாரணமாக இங்கிலாந்து நாட்டில் Hypnotism act 1952 என்ற சட்டமும், மற்றும் இஸ்ரேல் நாட்டில் Hypnosis Act 1984 சட்டமும் அதில் முக்கியமாக அரசு அனுமதியில்லாமல் ஹிப்னாடிசம் செய்தால் ஒரு வருடம் சிறைத் தண்டனை என்கிறது. இந்தியாவில் ஹிப்னாடிசம் சம்பந்தமாக தனிச்சட்டம் இல்லை. இருப்பினும் இந்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் மருத்துவத் துறையில் ஹிப்னோதெரபி மருத்துவத்திற்கு 2003-ஆம் ஆண்டு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி மனநல சிகிச்சைக்கு வரும் மனநோயாளிகளுக்கு அவர்களின் அனுமதியுடன் மருத்துவர்கள் மட்டுமே ஹிப்னாடிசம் செய்து மனநிலையை சரிசெய்ய அனுமதியுள்ளது. இப்படி தியானம், தீட்சை எனக்கூறி ஏமாற்றி ஒருவரின் அனுமதியில்லாமல் ஹிப்னாடிசம் செய்வது தனிமனித உரிமை மீறலாகும். பேராசிரியர் காமராஜ் தொடர்ந்த வழக்கில் தமிழக அரசு சார்பாக கோவை மாவட்ட எஸ்.பி. கொடுத்த ஆய்வு அறிக்கையில் உளவியல் மருத்துவர்களான மருத்துவர் ஹெலனா செவக்கொடி மற்றும் மருத்துவர் கிருத்திகாவின் பரிசோதனை தான் ஜக்கியின் செயல்பாட்டிற்கு எதிரான கேள்வியை எழுப்பியுள்ளது. அதில், "ஈஷா யோகா மையத்தில் நாங்கள் ஆய்வுசெய்த



Psychiatrists observation

35

From:
The Psychiatrists,
District Mental Health Programme,
Coimbatore


To
The Superintendent of Police.
Coimbatore District.

Respected sir,
We had interviewed few monks + volunteers. During their mental status examination + history elicitation, some are found to have mood swings occasionally. For further clarification + evaluation, Psychometric assessment & Blood + Urine samples of Drug Metabolites may be helpful.

(Dr. K. KIRUTHIGA, Reg no - 91667, DMHP Pollachi GH, Coimbatore)

2/10/24. DR. M. Helene Selvakodi, Reg. No: 71801, DMHP, Pollachi GH, Coimbatore

உச்ச நீதிமன்றத்தில் டாக்டர்கள் ஹெலனா, கிருத்திகா தாக்கல் செய்த மருத்துவ அறிக்கை



16. I further submit that the psychiatrists Dr.Kiruthiga and Dr.Helena Selvakodi who were part of the team submitted their report by observing that some people have mood swings and they need time to observe them and the report of the psychiatrists is not a conclusive one since they did not conduct any test on anybody. The report is herewith produced

Superintendent of Police
Coimbatore District

உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பாக எஸ்.பி. தாக்கல் செய்த ஆய்வு அறிக்கை

தன்னார்வலர்கள் மற்றும் துறவிகள் பலர் தன்னிலை மறந்து பேசுகின்றனர். அவர்களாகவே பேசித் திரிகின்றனர். ஏதோ ஒருவகையில் அவர்களின் மனநலன் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் உறுதித்தன்மை தெரியவேண்டுமெனில் அவர்களது சிறுநீர், இரத்தம் இவைகளை பரிசோதனை செய்தால் உறுதியான நிலை தெரியும்" என்றிருக்கின்றனர் இரு மருத்துவர்களும். உச்ச நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்ட இந்த அறிக்கை கிடப்பில் போடப்பட்டுள்ளதுதான் வேடிக்கையே.



திருநெல்வேலியில் சிறுமியைக் கடத்தி பாலியல் வன்கொடுமை: வாலிபருக்கு 5 ஆண்டு சிறை


## கோர்ட்டின் வங்கி கணக்கிலிருந்து ரூ.64 லட்சம் திருட்டு; குஜராத்தை சேர்ந்த தந்தை-மகன் கைது

ஹிப்னாடிசத்தால் பாதிக்கப்பட்டோருக்கு பல்வேறு சிக்கல்களை உருவாக்க முடியும், குறிப்பாக ஒடுக்கமான மனநிலையோ அல்லது கட்டாய மனநிலையோ உருவாக்கப்பட்டால், இதனால் Loss of Autonomy, Dependence on Others, (Dependence on Others, False Memories, Psychological Aftereffects, மற்றும் Post -Traumatic Stress Disorder உள்ளிட்ட மன நிலைப் பிரச்சினைகள் ஏற்படலாம் என்கின்றது மருத்துவம். ஹிப்னாடிசம் செய்து அடிமையாக்கினால் ஜக்கிக்கு என்ன லாபம்..? "தன்னை மிக கருணை உள்ளவராகவும், நானே உங்கள் குரு எனவும் எனது மகனின் ஆழ்மனதில் நிரந்தரமாக பதிவுசெய்து நிரந்தர மன பாதிப்பை ஏற்படுத்தி தன்வயப்படுத்தி அவரது கட்டுப்பாட்டில் வைத்து அந்த தியான (ஹிப்னாடிச) பயிற்சிகளை தினமும் செய்யவைத்து ஜக்கியை குருவாக நினைத்து ஒருநாள் விடாமல் தினமும் வணங்கச் செய்து அவரது அடிமையாக ஈஷா யோக மையத்தில் எந்த ஊதியமும் இல்லாமல் கடுமையாக வேலை வாங்கிவருகிறார். தியான தீட்சை (ஹிப்னாடிச) வகுப்புகளை தயார்செய்யும் அடிமை நிலையில் இருக்கும் நபர்கள் ஜக்கிக்காக எதனை வேண்டுமானாலும் செய்வார்கள்."

"ஹிப்னாடிசம் செய்வதற்கு பல நாடுகளில் சட்ட விதிமுறைகள் உள்ளன இந்தியாவில் இதற்காக தனியாக சட்ட விதிமுறைகள் எதுவும் இல்லை இருப்பினும் இந்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம் மருத்துவ துறையில் ஹிப்னோதெரபி மருத்துவத்திற்கு 2003-ஆம் ஆண்டு அனுமதி வழங்கியுள்ளது. அதன் படி மன நல சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு அவர்களின் அனுமதியுடன் மருத்துவர்கள் மட்டுமே ஹிப்னாடிசம் செய்து மனநிலையை சரிசெய்ய அனுமதி உள்ளது. ஆனால் மருத்துவர் அல்லாத சத்குரு என்ற ஜக்கி அலைஸ் ஜெகதீஷ் வாசுதேவ் ஆன்மீகம், யோகா மற்றும் தியானம் என விளம்பரம் செய்து தியான வகுப்புகளுக்கு வரும் நபரை அவர்கள் அனுமதியில்லாமல் தியான வகுப்பு என கூறி தவறான நோக்கத்துடன் ஹிப்னாடிசம் செய்வது சட்டத்திற்கு எதிரான ஒன்று. ஆகவே சத்குரு என்ற ஜக்கி அ ஜெகதீஷ் வாசுதேவ், பாரதி வரதராஜ், மா பிரத்யுதா மற்றும் தற்போதைய நிர்வாகி தினேஷ்ராஜா உள்ளிட்டோர் மீது மதத்தை தவறாகப் பயன்படுத்துதல் IPC 295A, நம்பிக்கை துரோகம் IPC 409, மோசடி IPC 420, மருத்துவர்கள் மட்டுமே பயன்படுத்தக்கூடிய ஹிப்னாடிசத்தை தவறான நோக்கத்துடன் செய்து நிரந்தர மனநல பாதிப்பை ஏற்படுத்துதல் IPC 328, ஹிப்னாடிசம் மூலம் ஒரு நபரை தன்வயப்படுத்தி தன் கட்டுப்பாட்டில் வைத்தல் IPC 342, எந்த ஊதியமும் இல்லாமல் அடிமையாக வேலைசெய்ய வைத்தல் IPC 370 & IPC 374, மனநல பாதுகாப்பு சட்டம் 2017 மற்றும் Drugs and magic remedies act 1954 போன்ற சட்ட பிரிவின்படி நடவடிக்கை எடுத்து ஹிப்னாடிசத்தால் பாதிக்கப்பட்டோரை மீட்கவேண்டுமென்பது என்னைப் போன்ற சாமானியனின் கோரிக்கை" என்கின்றார் ஜக்கியின் தியானம் எனும் ஹிப்னாடிசத்தால் பாதிக்கப்பட்ட முன்னாள் தனிப்படை காவலர் ஒருவர்.

மருத்துவர்களின் அறிக்கை, ஹிப்னாடிசம் குறித்த தெளிவான பார்வையோடு ஈஷாவில் விசாரணை நடத்தவேண்டியது அரசின் கடமை. ஈஷாவில் அடிமைகளாக தங்க வைக்கப்பட்டிருக்கும் அடிமைகள் மீட்கப்படுவார்களா? என்பது அனைவரின் கேள்வி.

**-நாகேந்திரன்**


The Committee did not recommend recognition to any of these alternative medicines except the already recognized traditional systems of medicines, viz; Ayurveda; Siddha; Unani, Homoeopathy and Yoga & Naturopathy which were found to fulfill the essential & desirable criteria developed by the Committee for recognition of a system of medicine. The Committee has, however, recommended that certain practices as Acupuncture and Hypnotherapy which qualified as modes of therapy, could be allowed to be practised by registered practitioners or appropriately trained personnel. The Committee further suggested that all those Systems of Medicine not recognized as separate Systems should not be allowed to continue full time Bachelor and Master's degree courses and the term "Doctor" should be used only by practitioners of Systems of Medicine recognized by the Government of India. Those considered as Mode of Therapy can be conducted as Certificate courses for registered medical practitioners to adopt these modes of therapy in their practice, whether modern medicine or Indian Systems of Medicine and Homoeopathy.

After carefully examining the various recommendations of the Committee, the Government accepted these recommendations of the Committee. Accordingly, it is requested that the State/UT Govt. may give wide publicity to the decision of the Govt. They may also ensure that institutions under the State/UT do not grant any degree/diploma in the stream of medicine which have not been recommended for recognition and the term 'Doctor' is used by practitioners of recognized system of medicine.

This issues with the approval of Secretary(Health), Ministry of Health & FW..

(Bhavani Thyagarajan
Joint Secretary

To
1. All Health Secretaries of States/UTs.
2. Secretary, UGC
3. Dental Council of India, Indian Nursing Council, Medical Council of India, Pharmacy Council of India, Indian Council of Medical Research
4. Secretary, Deptt. of ISM&H
5. CCIM, CCH, CCRAS, CCRYN, CCRH, CCRUM,

இந்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் வழங்கிய ஹிப்னோ தெரபி குறித்த உத்தரவு

www.nakkheeran.in

# கடத்தல் கேஸ்!

## எம்.எல்.ஏ. - ஏ.டி.ஜி.பி!

## வில்லங்க விசாரணை!



ஏ.டி.ஜி.பி. ஜெயராம்

பூவை ஜெகன்மூர்த்தி, ஏ.டி.ஜி.பி. ஜெயராம் ஆகியோர் சம்மந்தப்பட்ட சிறுவன் கடத்தல் வழக்கு சுப்ரீம் கோர்ட்டை எட்டியுள்ளது. திருவாலங்காடு காவல் நிலையத்தில் இந்த கடத்தல் தொடர்பாக மகேஸ்வரி உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களை விசாரணை செய்யும்போது, அவர்களுக்கு ஜெகன்மூர்த்தி உதவியதாகவும் அவர்தான் சிறுவனை கடத்தச் சொன்னதாகவும் வாக்குமூலம் அளித்தார்கள். ஏ.டி.ஜி.பி. ஜெயராம் அவருடைய அரசு வாகனத்தை போலீஸ் டிரைவருடன் கொடுத்து கடத்தலுக்கு உதவியாக இருந்தார் என்று போலீசார் தரப்பில் சொல்லப்பட்டது. அதனால் உயர்நீதிமன்றம் ஜெயராமை கைது செய்ய உத்தரவிட்டு, ஜெகன்மூர்த்தியை விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு ஆணையிட்டது.

உயர் நீதிமன்றத்தில் ஆஜரான ஜெயராமை கோர்ட்டிலிருந்து திருவாலங்காடு காவல் நிலையத்துக்கு காவல் துறை கொண்டு சென்றது. அங்கு அதிகாலை இரண்டு மணிவரை வைத்திருந்தார்கள். அதைத் தொடர்ந்து திருத்தணி டி.எஸ்.பி. அலுவலகம் கொண்டு செல்லப் பட்டார். மறுநாள் காலை ஜெகன்மூர்த்தி வழக்கை விசாரிக்கும் ஆய்வாளர் முன்னிலையில் ஆஜரானார். அன்று மாலையே ஜெயராமும் விசாரணை அதிகாரி முன்பு ஆஜரானார். ஜெயராமுக்கும் கடத்தலுக்கும் உள்ள தொடர்பு பற்றி கேள்விகள் கேட்கப்பட்டன. குற்றவாளிகளுக்கும் ஜெயராமுக்கும் உள்ள அறிமுகம் பற்றி விசாரிக்கப்பட்டது. அவரது வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. போலீஸ் விசாரணைக்கு அழைக்கும் நேரத்தில் வருவேன் என்ற ஒப்புதலை அவரிடம் எழுதி வாங்கிக்கொண்டு அவரை அனுப்பிவிட்டார்கள்.

அதைத் தொடரந்து சுப்ரீம் கோர்ட்டில் ஓய்வுக்கால நீதிபதி உஜால்புயான் தலைமையிலான பெஞ்சில் ஜெயராம் வழக்கு தொடர்ந்தார். ஜெயராமுக்காக வாதாடிய வழக்கறிஞர்கள் ராஜேஷ்சிங் சௌகான் மற்றும் ராம்சங்கர் ஆகியோர், சென்னை உயர்நீதிமன்றம் ஜெயராமை கைது செய்யப் பிறப்பித்த உத்தரவிற்கு தடை விதிக்குமாறு கோரிக்கை வைத்தனர். அதில் "அவர் ஒரு சீனியர் போலீஸ் அதிகாரி. அவரை உயர்நீதிமன்ற வளாகத்தில் கஸ்டடியில் எடுத்திருக்கிறார்கள். அவர் திருவாலங்காடு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட கடத்தல்



பாகிஸ்தானுக்கு உளவு பார்ப்பதாக குற்றஞ்சாட்டி
சைபர் மோசடி: ரூ. 22 லட்சம் இழந்த பெண்



பூவை ஜெகன்மூர்த்தி

வழக்கில் ஏற்கெனவே ஜாமீன் கேட்டிருக்கிறார். இந்தக் கைது, இயற்கை நீதிக்கு எதிரானது. அவர் கடத்தலில் சம்பந்தப்படவில்லை. அதே நேரத்தில், அவருக்கு நான் குற்றமற்றவன் என வாதிடும் வாய்ப்பும் கொடுக்கப்படவில்லை. உயர்நீதிமன்றம் அவரை உடனடியாக கைது செய்து போலீஸ் காவலில் விசாரிக்கும் அளவிற்கு எந்தவிதமான சூழலும் எழவில்லை. இந்தக் கைது, கடத்தல் வழக்கின் நோக்கத்தையே சிதைக்கிறது. குற்றவியல் நடைமுறைச் சட்டம் இதை சொல்லவில்லை. உயர்நீதி மன்றம் தனக்குள்ள உச்சபட்ச அதிகாரத்தைப் பயன்படுத்தி காவல் துறையின் தலைமைப் பதவியில் ஒன்றான ஏ.டி.ஜி.பி. பதவியில் உள்ள ஒரு அரசு அலுவலரை கைது செய்தது இந்தியாவிலேயே முதல் முறை. ஆகவே இது ஒரு விசித்திரமான உற்று நோக்க வேண்டிய வழக்கு. இது அதிகாரிகளுக்கு இடையேயான மோதலில் நடைபெற்றுள்ளது" என வாதிட்டார்கள். வழக்கை விசாரித்த நீதிபதிகள், "நாங்கள் பல ஆண்டுகளாக நீதிபதிகளாக இருக்கிறோம். எங்களுக்கு உயர் நீதிமன்றத்திற்கு கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தும் அதிகாரம் இருக்கிறதா என்று தெரியவில்லை. ஆகவே, இது தொடர்பாக மாநில அரசு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்" என உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள்.

இது பற்றி நம்மிடம் பேசிய தமிழக காவல்துறை அதிகாரிகள், ''அதிகாரிகளுக்கு இடையிலான போட்டியினால் ஜெயராம் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டார் என்பது பொய். அவரது அரசு வாகனம் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டது. அந்த வாகனத்தை ஓட்டிய போலீஸ்காரர், அதிகாரிதான் காரை கொடுத்து அனுப்பினார் என ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அந்தக் காரில் கடத்தல் குற்றம் நடைபெற்றது. குற்றவாளிகளை ஜெயராமுக்கு நன்றாகத் தெரியும். கடத்தலுக்கு முன்பும் பின்பும் அவர்களுடன் ஜெயராம் பேசியிருக்கிறார். ஆனால் இதை எதையும் தமிழக காவல் துறை ஹைகோர்ட்டில் அறிக்கையாக தரவில்லை. கடத்தலில் நடைபெற்ற விவரங்களை மட்டும்தான் நாங்கள் சொன்னோம். அதில் தொடர்புடைய ஜெயராமை கைதுசெய்ய உத்தரவிட்டது உயர்நீதிமன்றம். அவரை உடனடியாக கைது நடவடிக்கைக்கு உட்படுத்தி, புழல் சிறையில் நாங்கள் அடைத்திருக்க முடியும். அவ்வாறு செய்யாமல் நாங்கள் அவரிடம் விசாரணை நடத்தி, அவரை வீட்டிற்கு அனுப்பிவிட்டோம். அதிகாரிகளுக்கு இடையேயான போட்டியை எப்படி ஒரு கடத்தல் குற்றத்துடன் தொடர்புபடுத்த முடியும். அவர்களுக்கு இடையேயான போட்டியால் கடத்தல் நடைபெற்றதா என்பதற்கு என்ன ஆதாரம்" என எதிர் கேள்வி கேட்கிறார்கள், தமிழக காவல்துறை அதிகாரிகள்.

**-தாமோதரன் பிரகாஷ்**

படங்கள் : ஸ்டாலின்

## இறுதிச் சுற்று!
## சஸ்பெண்ட் உத்தரவு?

ஏ.டி.ஜி.பி. ஜெயராம், தனது பணியிடை நீக்கத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கு, நீதிபதிகள் உஜ்ஜல் புயான், மன்மோகன் அமர்வில் 19-ஆம் தேதி (வியாழக்கிழமை) விசாரணைக்கு வந்தபோது, தமிழகஅரசு வழக்கறிஞர் சித்தார்த் தேவ், 'ஆள் கடத்தல் வழக்கில் விசாரணை முடியும் வரை சஸ்பெண்ட் தொடர வேண்டும்' என்று தெரிவித்தார். அதனைக்கேட்ட நீதிபதிகள், 'எந்த அடிப்படையில் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்? சஸ்பெண்ட் உத்தரவின் நகல் உங்களிடம் உள்ளதா?' என்று கேள்வி எழுப்பினர்.

இதனைத்தொடர்ந்து, "சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படியே ஏ.டி.ஜி.பி. மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. கடத்தல் வழக்கின் விசாரணை முடிந்ததும் ஏ.டி.ஜி.பி. மீதான சஸ்பெண்ட் உத்தரவை ரத்துசெய்வது குறித்து அரசு முடிவு எடுக்கும்'' என்றார் அரசு வழக்கறிஞர்.


இந்த நிலையில், "இந்த வழக்கில் சில சிக்கல்கள் இருக்கின்றன. உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருப்பதால், சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து ஏ.டி.ஜி.பி. நிவாரணம் பெற்றுக் கொள்ளலாம்'' என்று தெரிவித்தது உச்சநீதிமன்றம்.

**-இளையர்**

www.nakkheeran.in

PUBLISHED BY **NAKKHEERAN GOPAL** ON BEHALF OF NAKKHEERAN PUBLICATIONS, 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14, AND PRINTED BY HIM AT NAKKHEERAN PRINTERS AND BINDERS 105, JANI JAHAN KHAN ROAD, ROYAPETTAH, CHENNAI-14. EDITOR : **NAKKHEERAN GOPAL**,

Posted at Egmore RMS, Patrika Channel, Chennai-08, NAKKHEERAN TAMIL BI-WEEKLY, RNI No.: 49456/88, REGD No.TN/CH/(C)/573/2023-2025
Licensed to Post without Prepayment No.:TN/PMG(CCR) WPP-649/2023-2025 Date of Publication on posting : Every Tuesday & Friday






advt